ஜநவிநோதிநி.

இல. 7.] ஜூலையீ 1877. [புஸ்த. VIII.

தீக்குருவி.

ஆபிரிகா அரெபியாமுதலிய தேசங்களிலுள்ள நீர் நிழலில்லாத பல பெரிய வனாந்தரங்களைப் பிரயாணக்காரர்கள் எளிதிற் கடந்துபோவதற்கு உபயோகமாய், வனாந்தரக்கப்பல்கள் என்று சொல்லத்தக்க ஒட்டகங்கள் அங்கே அநேகமாய் உண்டென்று முன்சொல்லியிருக்கிறோமல்லவா. விலங்குகளுள் ஒட்டகம் எப்படியோ அப்படியே பறவைகளிலும் ஒன்றிருக்கவேண்டுமென்று கருதியவர்போல கடவுள் அத்தேசங்களில் ஒட்டகத்திற்கு ஒப்பானதாய் ஒருவகைப் பறவையைப் படைத்திருக்கிறார். அதற்கு ஆஸ்டிருச் என்று பெயர். அப்பறவை தீயை விழுங்குவதனால் தீக்குருவி அல்லது தீப்பறவை என்றும், தீவாந்தரத்துப்பக்ஷியாதலால் தீவுக்குருவி என்றும் இத்தேசத்தார் வழங்குகின்றனர். தீவுக்குருவி என்பதே குறுகித் தீக்குருவியென வழங்குகிறதென்று சொல்வதே ஏற்கும்.

இத்தீக்குருவியானது எல்லாப் பறவைகளிலும் மிகப் பெரிதானது. தலை நுனிமுதல் பாதம்வரையில் அது சுமார் ஏழடி உயரமுள்ளது. சில பத்தடி உயரமும் இருப்பதுண்டு. அதின் தலை மிகவுஞ் சிறிது, கழுத்தில் இறகு கிடையாது; கொஞ்சம் மயிர் மாத்திரம் இங்குமங்குமாய்க் காணப்படும். அதன் தொடைகளில் மயிர் இறகு ஒன்றுங்கிடையாது. கால்களோ மிகவுறுதியாயும் சதைப்பற்றுள்ளதாயுமிருக்கும். இரண்டு விரல்களோடுகூடிய அதன் பாதங்கள் விசித்திரமாயிருக்கும். தீக்குருவியின் இரக்கைகள் மிகவும் சிறியவை; அதனால் அது பறக்கமாட்டாது. ஆயினும் அது செல்லும்போது கப்பற்பாய்போல் இரக்கைகளை விரித்தடிக்கிறபடியால், அதிக வேகமாய் ஓடுகிற குதிரையைவிட வேகமாய் ஓடும். இப்படித் தீப்பறவை ஒட்டகம்போல நீண்ட காலும், நீண்ட கழுத்தும், விரைவாய் ஓடுந்திறமையும் உடையதாயிருப்பதுமன்றி, முதுகின்மேல் ஒரு மனிதனைச் சுமந்துகொண்டு போகத்தக்க வலிமையும் உள்ளதாயிருக்கின்றது.

தீக்குருவிகள் ஆபிரிகாவிலும் அரெபியாவிலும் உள்ள அதி உஷ்ணமான மணல்வெளிகளில் காணப்படுவதுமாத்திரமேயன்றி, அமெரிகா தேசத்திலுமுண்டு. பெண்பறவைகள் மணல்களில் வளைசெய்து அதில் முட்டையிடுவது வழக்கம். அதின் முட்டை ஒரு சிசுவின் தலையவ்வளவு பருத்திருக்கும். வில்லிகள் அம்முட்டைகளைத் தின்று மேலோட்டைத் தண்ணீர் எடுக்கக் கலங்களாக வைத்துக்கொள்வார்கள். புல்பூண்டுமுதலியவைகளே தீக்குருவிகளுக்கு முக்கியமான உணவுகளாம். அவைகளோடு கல் மணி சிட்டம் தணல்முதலியவைகளைக் கூட விழுங்குவதுண்டு.

ஆபிரிகாதேசத்தார் இரக்கைகளிலும் வாலிலுமிருக்கிற வெகு அழகான இறகுகளுக்காகத் தீப்பறவைகளைப் பிடிக்கிறார்கள். அதின் இறகுகள் மிகவும் விலையுயர்ந்தவை; துரைசானிகள் அவைகளை அலங்காரமாய் உடைகளில் தரித்துக்கொள்வார்கள். அந்தப் பக்ஷியை யாராவது துரத்தித் தொடர்ந்துபோனால் அப்போது அது தன் தலையை வளைத்து மறைத்துக்கொள்ளும். தென் அமெரிகாவிலுள்ள இப்பக்ஷியின் உருவத்தை இதைப் படிப்பவர் எளிதில் காணும்படி இத்துடன் சேர்த்து அனுப்பியிருக்கிறோம்.

நெப்பியர் துரையும் தொம்பர்வித்தைக்காரனும்.

இங்கிலீஷ் ஜனங்களில் வித்தியாசம்பத்து, திரவியசம்பத்து முயற்சியுடைமை, வீரியதைரியசௌரியம், நேர்திடம், முதலியவை அமைந்துள்ள வம்சமே உயர்குலங்களென்று சொல்லப்படுவன. அப்படிப்பட்ட குலத்தில் நெப்பியர் என்பவர் 1782-ம் வருஷத்தில் ஜநநமானார். பாலியத்தில் அவர் தேகம் நோய்களாலே பீடிக்கப்பட்டு, உடம்பு சுட்கித்து நையாடியாயிருந்தார். அப்படியிருந்தபோதிலும் மனஞ்சோராமையும், ஒன்றுக்கும் அஞ்சாமையும், பூததயை பச்சாத்தாபம் முதலிய நற்குண நன்னடைகளில் பழகுவதற்கு அபேக்ஷையுமுள்ளவராயிருந்தார். நெப்பியருடைய தாய்தந்தையர் அவருடைய தேகஸ்திதி நலிவடைந்திருப்பதில் மநோதுக்கமுடையவராய்ச் சலனமடைந்திருந்தாலும், தம் புத்திரர் விசேஷ உள்ளக்கிளர்ச்சியும், வித்தை முதலிய விஷயங்களைக் கற்கவும் தொழில்செய்யவும் மிகுந்த ஆவலுமுள்ளவராயிருந்ததனாலே, அவர் தேகஸ்திதியை நோக்கி உண்டாயிருக்கும் மனவருத்தம் ஒருவாறு நீங்கி சந்தோஷமடைந்திருந்தார்கள். அவர்கள் அப்படியிருக்க நெப்பியரோ, பதினாலுவயசுக்குள் பதாதிபட்டாளத்தில் சேர்ந்து கபாத்து தொழி

வில் பழகிவந்தார். அதனால், அவருடம்பு நாளுக்குநாள் திடப்பட்டது. அப்படியிருக்க, பதாதிசேவகத்தில் சமர்த்தும் தைரியமும் சௌரியமும் உடையவராய்த் தன் தொழிலுக்கேற்ற சகல நடக்கைகளிலும் வல்லவராயிருந்து, தம் பதாதிசேவகம்போலவே மற்றக் குதிரைச்சேவகம் முதலானவைகளிலும் மிகப் பழக்கமானார். அப்படி அப்பியாசஞ்செய்துவருகையில் பகையாசருடைய கோட்டைக்குக் காவலாய் உள்ள காட்டாண், மலையரண், நீராண், மதிலரண் என்னும் நால்வகை அரண்களையும் தாண்டிச் செல்லத்தக்க பராக்கிரமமும், பகையரசருடைய போர்வீரர்கள் யுத்தஞ்செய்ய எதிர்த்துவரும்போது அவர்களெறியும் ஆயுதமுதலியவைகள் தம்மேல் படாமல் தப்பித்துக்கொள்ளுந்திறமும், சதுர்வித தந்திரங்களினாலே முற்றுகைபோட்டுச் சேனைகளை வென்று கோட்டையைப்பிடித்துக் கொடிநாட்டுகின்ற வீரமும் உள்ளவராய்ப் பழகிவந்தார். அப்படிவருங்காலத்தில் மற்றச் சேனைத்தலைவர்கள் நெப்பியருடைய சாமார்த்தியமுதலிய விசேஷங்களை அறிந்ததுமன்றி, இவர் படையாட்களோடுகூட அத்தொழில்களில் அப்பியசித்தவராகையால் இவர் அப்படைகளை அடக்கியாளும் வல்லபமுடையவராய் இருக்கமாட்டுவாரென்று நினைத்துப் பதாதிப்பதின்மருக்கு சிலநாள் தலைவராகவும், பின் அப்படியே நூற்றுவருக்கு முதல்வராகவும், பிறகு ஆயிரவருக்கு எஜமானராகவும், அதுபோலவே குதிரைப்பட்டாளத்திலும் வைத்திருந்தார்கள். இவ்விதம் நடந்துவரும் உத்தியோகத்தோடு துரைத்தனத்தார் இந்தியாவுக்கு அனுப்பினார்கள். சேனைகளுடன் யுத்தசந்நத்தராய்ப் பகைவர்மேற் படையெடுத்துப் போனவர்களுள் ஜெயம் அடைந்து காரியசித்தியோடு திரும்பிவந்தவர் இவர் ஒருவர்தான். அப்போது இவருக்குப் பிராயம் நாற்பது ஆயிற்று. இந்த நெப்பியர் இல ராணுவங்களுக்குத் தலைவராயிருக்குங்காலத்தில், துரைத்தன மந்திராலோசனைச் சபையாரில் ஒருவராகிய முக்கிய சேனாதிபதி, தாம் வயோதிகராய் உத்தியோகம்பார்க்க அசக்தராயிருந்ததை நினைத்து, மேற்படி ஆலோசனைச் சபையாரைத் தனக்கு உபகாரச்சம்பளம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதற்கு அந்தச் சங்கத்தார், நீர் ராணுவத்தலைவர்கள் அநேகர்களிடத்தில் பழகியும், அவர்களை அடக்கியும், உமது சொற்படி நடத்தியும், அவரவர்கள் வீரதீர சௌரிய பராக்கிரமமுதலியவற்றை நன்றாய்த் தெரிந்தும் தெளிந்தும் இருப்பீரன்றோ; உமக்கு உத்தியோகம் வேண்டாமல் நீர் உபகாரச்சம்பளம் பெறுகிறபக்ஷத்தில் இவ்வலுவல் யாருக்குக் கொடுக்கக்கூடும்? ஆராய்ந்து மனோதிடமும் யுக்தியும் முயற்சியுமுள்ள ஒருவரது பெயரைச் சொல்லுமென்றார்கள். அதற்கு அவர் நெப்பியர் ஒருவரே சகலவிதத்திலும் திராணியுள்ளவரென, அதைக்கேட்டு அவர்கள், தாங்கள் கேள்விப்

பட்டிருந்ததுபோலவே இவரும் சொன்னாரென்று நினைத்து, நெப்பியர் துரைக்குத் தளகர்த்தரென்னும் சேனாதிபதி உத்தியோகத்தைச் சபையார் யாவரும் சம்மதித்துக்கொடுத்தார்கள். அவர் நெடுநாள் அதிலிருந்து சேனைகளோடு அந்நியதேசத்தரசர்களைத் தம்வசமாக்கி, அவர்கள் தங்கள் துரைத்தன அதிகாரத்துக்குக் கப்பம் அல்லது திறை செலுத்தும்படி செய்வித்துக்கொண்டேவந்தார். இவருடைய பெயரைக்கேட்டவளவில் அந்நியதேசத்து ராஜாங்க தளகர்த்தர்களும் அஞ்சி நடுங்குகின்றார்கள்.

இவருடைய தைரியத்துக்கும் கபடமின்மைக்கும் திருஷ்டாந்தமொன்றுண்டு: — ஒரு யுத்தத்துக்குப்பின்பு ஒருநாள் தமது கூடாரத்தில் கேளிவிலாசமாய்ச் சிநேகர்களோடு நெப்பியர் துரை உட்காந்திருந்தார். அந்தச் சமயத்தில் செப்பிடுவித்தை, காருடவித்தை, மாயவித்தை, மோகனவித்தை, கழைக்கூத்தாடும் வித்தை, கண்கட்டுவித்தை, கொடிவித்தை, ஆயுதவித்தை இவை முதலியவை தேர்ந்துள்ள கூட்டத்தாரில் எல்லா விஷயங்களையும் சாதுரியமாய் நடத்தத்தக்க சில தொம்பர் வந்தார்கள்; வந்து நெப்பியரின் பிரதாபத்தை எடுத்துப் புகழ்ந்ததுமன்றி, தங்கள் ஹஸ்தலாகவமுதலியவற்றைப் புகழ்ந்து சொல்லி ஆடத்தொடங்கினார்கள். அவைகளில் ஒன்றைவிட மற்றொன்று அதிசயம் உண்டாக்கத்தக்கதாய் ஆடிமுடித்துக் கடைசியில் ஒரு தொம்பன் மற்றொரு தொம்பனது உள்ளங்கையில் ஒரு எலிமிச்சம்பழத்தைவைத்துக் கையைநீட்டி இருக்கச்செய்து பட்டாக்கத்தியைக் கையிலெடுத்து சுழற்றுகிறவன்போல அக்கத்தியினால் அந்த எலிமிச்சம்பழத்தை பேர்பாதியாய் அறுத்துவிட்டான். அது அறுபடும்போது அக்கையில் காயம்படாமலே இருந்தது. அங்கிருந்து பார்த்தவர்கள் ஆச்சரியமடைந்தார்கள். நெப்பியர் துரையோ சந்தேகித்து ஆச்சரியப்படவில்லை; இது மோசவடி என்று நினைத்தார்; இதைச் சோதனை செய்வோமென்று கத்திவைத்திருந்த தொம்பனைச் சமீபத்தில் வருவித்து, நெப்பியர் தமதுகையில் ஒரு எலிமிச்சம்பழத்தை வைத்துக்கொண்டு இதை இரண்டு துண்டாக்கு பார்ப்போம் என்றார். அதற்கு அவர் கையைப்பார்த்து தொம்பன் என்னால் வெட்டக்கூடாதென்றான். அது என்னநிமித்தமென்று கேட்டார். அதற்கு தொம்பன், அவருடைய மற்றொரு கையை நன்றாய்க் காட்டச்சொல்லிப் பார்த்து இதில் பழத்தை வைத்துக்கொண்டால் கையில் காயம் படாதபடி இரண்டு துண்டாக வெட்டுவேன் என்றான். இந்தக் கையில் ஏன் வெட்டக்கூடாதென்று வினாவ, உள்ளங்கை கொஞ்சம் குழியாயிருப்பதனால் கட்டைவிரலில் கத்திவெட்டு படுமென்றான். மற்றொரு கையோ குழிந்திராமல் சமப்பரப்பாயிருத்தலால் கையில் வடுப்படாமல் பழத்தை இருபிளவாக வெட்டினான். இதைப்பார்த்த நெப்பியர்

சற்றுப் பிரமித்துக் கத்தியைக் கையாளும் அத்தலாகவத்தைக் கண்டு மகிழ்ந்தவராய் வெகுமதிகொடுக்க, அதைப் பெற்றுக்கொண்டு அவரிடத்தில் உத்தரம்பெற்றுத் தொம்பர் கூட்டத்தார் போனார்கள்.

நெப்பியர்துரை, இது பெரிய ஸாகஸவித்தை என்றும், பழத்தைத் துண்டித்த கத்திநுனி நீரில் நனைந்த கயிறு ஒன்று சற்று கையில் தாக்கினாற்போல் குளிர்ச்சியாயிருந்ததென்றும்,தன்கீழ் உத்தியோகஸ்தர் முன்னிலையில் அவ்வித்தைக்காரனை இகழ்ந்து சௌரியம்பேசாமலிருந்தால் அந்த ஸாகஸமான பரீக்ஷைக்கு உட்படாமல் விலகிவிட்டிருப்பேனென்றும் உண்மையைச்சொன்னார். "நல்லானை நாவில் உரை, பொன்னைக் கல்லில் உரை" என்னும் பழமொழி இதனால் ஸ்பஷ்டமாகின்றது.

நெப்பியர் துரை நெடுநாள் சேனாதிபதியலுவல் பார்த்ததனாலே விசேஷ உபகாரச்சம்பளமும் பெற்று வாழ்ந்திருந்து தெய்வபக்தியுடையவராய் 1850-ம் ஆண்டில் பரலோகம் அடைந்தார்.

பேராசை

பேராசையென்றால் அளவுக்கு மிஞ்சின ஆசை. மனிதனுக்கு ஆசையென்று ஒன்று இருக்கவேண்டியதுதான்; ஆனால் அமிர்தமும் அளவிற்கு மிஞ்சினால் நஞ்சாகும் என்கிறபடி, இவ்வாசையானது ஒருவனிடத்தில் மிதமிஞ்சியிருக்குமானால் அதனால் அவனுக்குத் துன்பமே நேரிடும். ஆசையென்னும் பதமானது பலவித வாஞ்சைகளையுங்குறிக்க வழங்கினபோதிலும், பேராசையென்பது செல்வப்பொருளின்மேல் உண்டாகும் மிதமிஞ்சின ஆசைக்கே பெயராய் வழங்குகிறது.

உலகத்திலே எல்லாரும் செல்வத்தினால் சகல காரியங்களையும் சாதிக்கலாமென்று நம்புகிறார்கள். அதனால் தங்களுடைய நாட்டம் எதின் மேலிருந்தாலும் திரளாகப் பொருள்சேர்ப்பதையே தங்களுடைய லக்ஷியமாக வைத்திருக்கிறார்கள். தங்களுடைய மனதைப் பொருள்சேகரிப்பதிலேயே செலுத்துவதினால், நாளாவர்த்தியில் அவர்களுடைய மனமானது பொருளைக் கண்டவளவிலேயே திர்ப்தியடைய ஆரம்பிக்கிறது; அதனால் பொருளையே மேன்மேலும் தேட விரும்புகிறார்களேயல்லாமல், அப்பொருளால் வேறொன்றையுஞ் சாதிக்க முயற்சிசெய்கிறதில்லை. அவர்கள் திரளாகப் பொருள் குவிப்பதிலேயே மனதைச் செலுத்திவிடுகிறபடியாலும், அதைக் கண்டமாத்திரத்திலேதானே பூர்ணதிர்ப்தியுண்டாவதுபோல் அவர்களுக்குத் தோன்றுகிறபடியாலும், தாங்கள் தேடும் பொருளைச் செலவழியாமல் வைத்து இன்னமும் சம்பாதிக்கவேண்டுமென்கிற ஒரு பேராசை அவர்கள் மனதில் ஜநிக்கிறது. பொருள் சேர்ப்பதையே நாட்டமாகக்கொண்டவன் அப்பொருள் தீயவழியில்

வருவதாயினும் அதைத் தேடாமலிரான்; ஆகையால் இந்தப் பேராசை அவனைத் தீயவழியில் கொண்டுபோகும். அப்படிச் சேர்த்த பொருளைப்பார்ப்பதில் திர்ப்தியுண்டாவதுபோல் தோன்றுகிறதேதவிர, உண்மையாய் நோக்குமிடத்தில் அவனுக்கு அதிர்ப்தியே உண்டாகின்றது. எப்படியெனில், அவன் தன் பொருளைப் பார்க்குந்தோறும் பேராசையென்னும் பேய் அவனிடத்திலிருக்கிறபடியால், அந்தப்பொருள் எவ்வளவு அதிகமாயிருந்தாலும் சிறிதாகவே காணப்படும். இப்படிச் சம்பாதிக்கிற பொருளை அவர்கள் அனுபவிக்கிறதேயில்லை; அதைக் காப்பாற்றவேண்டுமே என்கிற விசாரம் மனதிற் புகுந்துகொண்டு எப்பொழுதும் அவர்களை வருத்திக்கொண்டேயிருக்கிறது. அவர்களுடைய காலத்திற்குப் பிறகாவது, அவர்கள் காலத்திலேயாவது வேறொருவன் அப்பொருளின் பயனை அனுபவிக்கிறான். இவையெல்லாம் அடியில் வரும் ஒரு சிறிய கதையால் நன்றாய் விளங்கும்.

முற்காலத்தில் ஓர்தேசத்தில் ஒரு அரசனிருந்தான். அவன் வெகு தனவானாகவிருந்தும், அதிக பேராசைக்காரனாயிருந்தான். ஆகையால் தன் பேராசையைத் தணிக்கப் பெரும்பொருள் சம்பாதிக்கத்தொடங்கினான். அப்படி அவன் பொருள் சம்பாதிக்கச் சம்பாதிக்க ஆசையும் வளர்ந்துகொண்டே வந்தது. அதனால் குடிகளை அதிகமாய் வருத்தத்தொடங்கினான். அப்படித் திரளாக சேர்த்த பொருளைத்தானதருமமுஞ்செய்யாமல், தானும் அனுபவியாமல் வைத்ததினால் அப்பொருள் அபரிமிதமாகக் குவிந்தது. அப்பொழுது அவன் மனதிலிருந்த பேராசையென்னும் பேயானது அவனைவிட்டு நீங்கி, துன்பமென்கிற மற்றொரு பேயைத் தனக்குப் பதிலாய் அவனிடத்துக்கனுப்பியது. அத்துன்பமாவது: இவ்வாறு கஷ்டப்பட்டு ஈட்டிய பொருளைக் கள்வர் கவராமல் பத்திரஞ்செய்யவேண்டுமேயென்கிற வருத்தத்தினாலுண்டாகிய துன்பந்தான். அதற்காக வெகு நாள் பிரயாசப்பட்டும் ஒருவழியுந் தோன்றாமலிருந்து, பிறகு ஒரு நாள் தற்செயலாய் ஒரு யோசனைதோன்றிற்று; அப்பொழுது அவன் ஒரு கொல்லனை அழைப்பித்து, தன்னுடைய மாளிகையின் தெருப்பக்கத்தில், ஓரிடத்தில்; ஐந்து அடி கனமுள்ள சுவரெடுத்து, பலகணிகளில்லாமல் ஒரு சிறிய கதவுடன் ஒரு அறையைக் கட்டுவித்தான். பின்பு அந்த அறையில் ஒருவருக்குந்தெரியாமல் தன்னுடைய பொன் வெள்ளிகளைப் பெரிய ஜாடிகளில் போட்டு, மற்ற மரகதம் வைடூரியம்முதலான விலையுயர்ந்த கற்களையும், இன்னமுள்ள நாணயங்களையும் இராசியிராசியாய்க் கொட்டிவைத்துக் கதவைப்பூட்டி, வாரத்திற்கொரு முறை பார்வையிட்டுக்கொண்டிருந்தான்.

இப்படியிருக்கையில் அந்த அறைகட்டிய கொல்லனுக்கு இறந்துபோகிறகாலம் வந்துவிட்டது. அப்போது அவன் தன் இரண்டு பிள்ளைகளையழைத்து: ''பிள்ளைகளே! நான் உங்களுக்கு ஓர் ஆஸ்தியும் வைக்கவில்லை. ஏனென்றால் இந்த அரசன் என்னிடத்தில் நன்றாய் வேலையைவாங்கி மிகவுமுலோபமாய்க் கூலிகொடுத்தான். ஆனாலும் ஒன்று சொல்லுகிறேன், அதை ஒருவனுடனும் சொல்லாமலிருக்கவேண்டியது. அரசனுக்கு நான் கட்டிய பொக்கிஷவறையில் தெருப்பக்கமிருக்கிற சுவரில் ஓர் அடையாளஞ்செய்த கல் ஒன்று வைத்திருக்கிறேன். அதை ஒருவர் அல்லது இரண்டுபேர் எளிதில் எடுத்து மறுபடியும் வைத்து

விடலாம். உங்களுக்கு அவசியமானபோது அங்கிருந்து பணமெடுத்துக் கொள்ளலாம்" என்று சொல்லி இறந்துபோனான்.

பின்பு இவ்விரண்டு பிள்ளைகளுந் தங்களிடத்திலிருந்த சிறிதுபொருளைத் தீயவழியில் செலவுசெய்து, உலோபியாகிய அரசன் செல்வத்தைக் கவரும்படி ஓரிராத்திரி நிலவில் அரசன்வீட்டுக்குப்போய், ஒருவருக்குந் தெரியாமல் அந்தக் கல்லைத் திறந்துகொண்டு உள்ளேபோய்த் தங்களுக்கு வேண்டிய பணத்தை வாரிக்கொண்டு, பின்பு வெளியில் வந்து முன்போல் அந்தக் கல்லைச் சுவரில்வைத்து வீட்டுக்கு வந்துவிட்டார்கள். இப்படியே மறுநாள் ஒரு வண்டியில் பொன்ஜாடிகளிலிரண்டைக் கொண்டுவந்தார்கள். இப்படி அநேகநாள் நடந்துகொண்டுவந்தது. அரசன் தன் வழக்கப் படிக்கூதவைத் திறந்துபார்க்கையில் பணக்கும்பல் குறைந்ததுபோலத் தோன்றியும் நன்றாய் யோசியாமல் போய்விட்டு, மறுவாரம் வந்து பார்வையிட்டவிடத்துப் பின்னுங்குறைந்திருப்பது கண்டு ஒருதரம் பார்த்தான், பின்பு கண்ணைக் கழுவிக்கொண்டுவந்து நன்றாய்ப்பார்த்தான்; பொருள் குறைந்திருப்பதாகத் தனக்கு நிச்சயமாய்த் தோன்றினபடியால், ஓரிடத்தில் வேறாக வைடூரியங்களைக் கும்பலாகப் போட்டுவைத்துக் கதவைப் பூட்டிக்கொண்டு சென்றான். பின்பு மறுநாட்காலையில் வந்து பார்த்த போது, அந்த வைடூரியக் கும்பல் காணாதபடியால் அங்கொரு வலையைப் போட்டுவைத்தான். இந்தப் பிள்ளைகள் வழக்கப்படி அன்று ராத்திரி வந்தார்கள். முதலில் இளையவன் உள்ளே நுழைந்து வலையிற் சிக்கிக்கொண்டு, வலையையறுக்கவும் வலையோடுகூட வெளியில் வரவும் காலைவாங்கிக்கொள்ளவுங் கூடாமையால், மூத்தவனைப்பார்த்து: "அப்பா! என் தலையை வெட்டிக்கொண்டுபோ, தலைபோன முண்டத்தைப்பார்த்தால் ராஜாவுக்கு அடையாளந் தெரியாது; இல்லாவிட்டால் உன்னையும் என்னையுங் கொன்றுவிடுவான்" என்று சொல்ல, அவன் துக்கத்துடனே தம்பி தலையை வெட்டி எடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போய்த் தாயுடன் இச்செய்தியைச் சொல்ல அவள், அந்த முண்டத்தையும் நீ கொண்டுவரவேண்டியது; இல்லாவிடில் நான் இந்தச் செய்தியை அரசனுடன் சொல்வேனென்று ஒரேபிடிவாதமாய்ச் சொன்னாள். இதனிடையில் அரசன் கதவைத்திறந்துபார்த்து இரண்டுபேர் வந்ததாகக் காண்கிறதென்று நிச்சயித்து, காவற்காரருடன்: "இந்தப் பிரேதத்தைக்கொண்டு போய். ஒரு மரத்தில் தொங்கவிட்டுவைத்துக் காவலிருங்கள்; யாராவது அதைப்பார்த்தழுதால் அவர்களை என்னிடத்துக்குக் கொண்டுவாருங்கள்" என்று கட்டளையிட்டான்.

மறுநாட்காலையில் இந்தப் பிணம் மரத்தில் தொங்குகிறதென்று தாய் கேட்டவளவில், தன் மகனைப்பார்த்து: "நீ அதைக் கொண்டுவரவேண்டியது; இல்லாவிடில் நானேபோகிறேன்" என்று சொல்ல, இவன், ஒரு வேளை இவள்போனால் தன் தலைக்கு ஆக்கினைவருமென்று நினைத்துத் தான் போகிறதாக ஒத்துக்கொண்டான். பின்பு இரண்டு தோற்பைகளில் நிறையச் சாராயம் ஊற்றி ஒரு எருதின்மேல்போட்டு அந்தப் பிரேதமிருக்கிறவிடத்தில் கொண்டுபோய் ஒருவருக்கும் தெரியாமல் அதின் வாய்க்கட்டை அவிழ்த்துவிட்டு சாராயம் பெருகியோடுவதைப் பார்த்து கோவென்றலரியழுது, அதை நிறுத்தத்தெரியாதவன்போல் நாலண்டையும் ஓடிக்கொண்டிருக்க, அங்கிருந்த காவற்காரர்கள் தங்கள்

பாத்திரங்களைக்கொண்டு சாராயத்தை ஏந்தி அதை வைக்க மறுபாத்திரமில்லாமையால் வயிறுநிறையக் குடித்தார்கள். அவன் அவர்கள் மடமையைப்பார்த்து நகைத்துக்கொண்டு பையின் வாயைக்கட்டி எருதை ஓட்டிக்கொண்டுபோய்விட்டான். அப்பொழுது பகல் பனிரண்டு மணியாயிற்று. காவற்சேவகர்களும் மயக்கமாயிருந்தார்கள்.

மறுபடியும் இவன் எருதை ஓட்டிக்கொண்டுவந்து அவர்களுடனே வேடிக்கையாக அன்று சாயங்காலம்வரைக்கும் விளையாடி அவர்களுக்கு அதிகமாகச் சாராயத்தைக்கொடுத்து அவர்கள் அந்த வெறியில் மெய்ம்மறந்து கிடக்குந்தருணத்தில் ராத்திரி பதினொரு மணிவேளையில் எளிதாக ஒருவருக்கும் தெரியாதபடி அந்தப் பிணத்தையெடுத்து எருதின்மேல் போட்டுக்கொண்டு அந்தக் காவற்சேவகரின் தாடி மீசையில் பாதி க்ஷெளரம் பண்ணிவிட்டுத் தன் வீட்டுக்குப் போய்விட்டான். விடிந்தபின்பு அவர்கள் பிரேதத்தைக்காணமல் திகைத்து நடந்த வர்த்தமானங்களை அரசனிடத்துச்சொன்னார்கள். அரசன், இப்படிப்பட்ட திருடன் வெகு புத்திசாலியாகவிருக்கவேண்டும்; அவனுடைய யுக்திக்குமெச்சி நாம் அவனுக்குச் சன்மானஞ்செய்தால் திருட்டுத்தொழிலை அபிவிர்த்திசெய்ததுபோலவாகிறது; ஆயினும் நாம் திருட்டுத்தனத்திற்குச் சன்மானஞ்செய்யவில்லையே, யுக்திக்குத்தானே பரிசுகொடுக்கிறோம். இந்த யுக்தியானது தீயவழியில் நடப்பவனுக்கே இவ்வளவு நன்மையைத் தருமாயின், நல்வழியில் நடப்பவனுக்கு எவ்வளவு நன்மையைத் தராது? ஆகையால் இவ்வறிவுடைமையாகிய யுக்தியை அபிவிர்த்திசெய்யவேண்டியதென்று நிச்சயித்து, "என்னுடைய பொருளைக் கொண்டுபோனவன் இன்னவிதமாய்க் கொண்டுபோனேனென்று சொல்லிவிட்டால் அவனை நான் கொல்வதில்லை; என்னுடைய பெண்ணை அவனுக்கு விவாகம் செய்துகொடுக்கிறேன்" என்று விளம்பரம்செய்தான். அதைக்கேட்டு இந்தக் கொல்லன்மகன் தான் களவுசெய்தவழியை அரசனுக்குச் சொல்ல, அதற்கு அரசன் "எகிப்து தேசத்தார்கள் மற்றத் தேசத்தாரைவிட யுக்திசாலிகள், நீ அவர்களைக்காட்டிலும் அதிகயுக்திசாலி" என்றுகொண்டாடித் தன் பெண்ணை அவனுக்கு விவாகஞ்செய்துகொடுத்துத் தன் ராஜ்யத்தையும் அவனுக்குக் கொடுத்துச் சீக்கிரத்தில் இறந்துபோனன்.

இப்படி இந்த அரசன் தான் தேடிய பொருளைத் தானும் அனுபவியாமல் பிறருக்கும் அறம்செய்யாமல் வேறொரு யுக்திசாலி அனுபவிக்கக் கொடுத்துப்போனன். நன்றாய் ஆராய்ந்துபார்க்குமளவில் உலோபியான தனிகர்களெல்லாம் யாரோ ஒருவருக்குக் கடன்பட்டிருப்பவர்களென்றே நிதானிக்கத்தக்கதாய் இருக்கின்றது.

தக்காணத்துப் பூர்வகதைகள்.

நரியும், அம்பட்டனும், ஏழுபெண்ணுள்ள ஒரு பிராமணனும்.

ஒருகால் ஒரு அம்பட்டனுக்கும் நரிக்கும் நேசமுண்டா யிற்று. அவர்களுள் நரி மிகவும் கபடநினைவும் கள்ளக்கருத்து முள்ளது. ஆயினும் அம்பட்டன், தன்னைப்போல் ஒருபோதும் சூது நினைப்பு நினையாமலும், தான் சூதுசெய்வதாகத் தன்னிடத் தில் அவன் ஒருபோதும் ஐயப்படாமலும் இருக்கும்படி நரி அவ்வளவு சாமர்த்தியமாய் நடந்துவந்தது. அந்த நரி அவ்வளவு மோசநினைவு கொண்டிராமலிருக்குமாயின், அந்த நேசம் நாளது வரையிலுங்கூட நீடித்துவந்திருக்கும். இப்படிப்பட்ட சூதுகள் ஒன்றையும் அம்பட்டன் அதிகமாய் அறியான்.

இப்படியிருக்கையில், ஒருநாள் நரி அம்பட்டனண்டைவந்து: தோழனே! நாம் நமக்குச் சொந்தமாய் ஒரு தோட்டம்வாங்கி அதில் வெள்ளரி, வள்ளி, பூசுணிமுதலிய படர்கொடிகள் போட்டுப் பயிர்செய்தால் எவ்வளவு நன்மையாயிராது! நாம் ஏன் அப்படிச் செய்யக்கூடாது என்றது. அதுகேட்டு அம்பட்டன்: நீ சொன்ன யோசனை வெகு நன்றாயிருக்கிறது; அப்படியே செய் வோம்; இதோ திரவியமிருக்கின்றது, இதைக் கொண்டுபோய் நமக்காக ஒரு நேர்த்தியான தோட்டம் வாங்குவாயா? என்று சொல்ல, நரி ஆகட்டுமென்று அவன் கொடுத்த பொருளை வாங் கிக்கொண்டுபோய் வெள்ளரிமுதலிய பல படர்கொடிகளும், மா பலாமுதலிய பழமரங்களும் நிறைந்த ஒரு ஸாரக்ஷேத்திரமான தோட்டத்தை வாங்கித் தினந்தப்பாமல் அத்தோட்டத்திற்குச் சென்று அங்குள்ள பழங்களைத் திருப்தியாய்ப் புசித்துக்கொண்டு வந்தது. ஒருநாள் அம்பட்டன்: நீ நமக்கு வாங்கின தோட்டம் எப் படியிருக்கிறதென்று கேட்டதற்கு, நரி: வெகு சிறந்ததாயிருக்கின் றது; அதில் வெகு நேர்த்தியான பழமரங்களும் செடிகளுமிருக் கின்றன. இன்னும் பழுக்கின்ற தருணமாகவில்லை; பழுத்தால் உனக்கு அவசியம் தெரிவிக்கிறேன் என்றது. அதைக்கேட்டு அவன் திருப்தியடைந்து பிறகு அதைப்பற்றி யாதொன்றும் கேளாமலேயிருந்தான்.

சிலநாள் கழித்தபின்பு அம்பட்டன், தோட்டம் இன்னும் பழுக்காமலிருக்குமாவென்று எண்ணி ஒருநாள் நரியைப்பார்த்து: நேசனே! தோட்டத்தில் செடிகள் இன்னும் பழுக்கவில்லையா? என்று கேட்க, அந்தக் குள்ளநரி, என் அன்பனே! இன்னு மில்லை; இப்போதுதான் மரங்கள் பூவெடுக்கின்றது என்று சொல்

விற்று. இவ்வளவுகாலத்தில் அத்தோட்டத்தில் பழுத்தபழத்திற்கும் நரி தின்றதற்கும் கணக்குவழக்கில்லை. வெகுவாய் நரி அத்தோட்டத்திலேயே குடியாயிருந்து பழங்களை வாயோயாமல் தின்றுகொண்டேயிருந்தது.

சிறிதுகாலங்கழித்து மறுபடியும் அம்பட்டன்: தோட்டத்தில் இன்னும் பழம் பழுக்கவில்லையாவென்று கேட்டான். அதற்கு நரி: இப்போதுதான் பூஉதிர்ந்து பிஞ்சு விடுகிறதருணமாயிருக்கின்றது. பழுக்கிற பருவமாயின் உனக்கு அறிவியேனா? என்று சொல்லவே, அவன்: இதென்ன அதிசயமாயிருக்கின்றது; செடிகளெல்லாம் பழுத்து மாறுகிறசமயம் வந்துவிட்டதே, "இன்னும் பழுக்காமலிருக்குமா! நரி நம்மை மோசஞ்செய்வதுபோலே தோன்றுகின்றதென்று தனக்குள்ளேயே யோசனைபண்ணிக்கொண்டு, அதைப்பற்றி நரியுடன் ஒன்றுஞ்சொல்லாமலே, மறுநாள் நரி தோட்டத்திற்குப் போம்போது அதற்குத் தெரியாமலே அதைப் பின்தொடர்ந்துபோனான்.

அன்றையதினம் அந்த நரி தன் இனத்தாரையெல்லாம் விருந்துண்ணத் தன் தோட்டத்திற்கு வரும்படி வேண்டியழைத்திருந்ததனால், பக்கத்துக் காடுகளிலுள்ள நரிகளெல்லாம் கூட்டங்கூட்டமாய்க் குதித்துக் கூத்தாடிக்கொண்டு இத்தோட்டத்திற்கு வந்து பழவகைகளையெல்லாம் கடித்துப் புஜித்துக் கொழுத்துக் கூச்சலிட்டுக் கோலாகலமாயிருந்தன.

அம்பட்டன் வேலியண்டை பதுங்கிநின்று இந்தக் காட்டுமிருகங்களெல்லாம் கூட்டங்கூடிக் கோலாகலமாயிருப்பதையும், தனக்குத் தோழன்போல நடித்த திருட்டுநரி அவைகளுக்கு வேண்டியபடி உபசாரஞ்செய்து சிலவற்றோடு விநோதமாய்ப் பேசிக்கொண்டும், சிலவற்றோடு சிரித்துக்கொண்டும், பலவற்றோடு பழங்களைப் பேராநந்தமாய்ப் புசித்துக்கொண்டுமிருப்பதையுங்கண்டு மிகவும் கோபமடைந்தான். ஆயினும், அந்த மிருகங்களெல்லாம் பெருங்கூட்டமாயும் மிக்க வலிமையுள்ளவைகளாயுமிருந்ததால், தற்காலத்தில் அவைகளை ஒன்றுஞ்செய்யத்துணியாமல், ஆகட்டும்; நான் இந்தத் திருட்டுநரியை விட்டேனா! மறுபடி அது இந்தத் தோட்டத்திற்கு வந்து துள்ளித்தலையெடுக்கவொட்டாமல் செய்துபோடுகிறேன் என்று சொல்லி உடனே வீட்டுக்குப்போயினான். தருணம்பார்த்திருந்து அந்த நரியெல்லாம் ஓடிப்போனபின்பு அவன் மறுபடியும் தோட்டத்திற்கு வந்து, அங்கே நரிகள் தின்று மிகுந்திருந்த ஒரு பெரிய வெள்ளரிப்பழத்தில் இலைமறைவாய் ஒரு கூர்மையான கத்தியைக் கட்டிவிட்டு வீடுபோய்ச்சேர்ந்தான். இவ்வாறு தான் தோட்டத்தில் கண்ட அதிசயத்

தையாவது, அந்தப் பகையைத் தீர்ப்பதற்காகத் தான் செய்ததை யாவது அவன் ஒருவரோடும் சொல்லவில்லை.

நரி மறுநாள் காலையில் எழுந்து, நமது தோட்டத்தில் ஒரு பழமாவது இராதா, போய்ப் பார்த்துவரவேண்டுமென்று எண்ணங்கொண்டு புறப்பட்டுத் தோட்டத்திற்குவந்து முழுதுஞ் சுற்றித் தேடிப்பார்த்தது; எங்கும் ஒரு பழமும் அகப்படவில்லை. கடைசியில் அம்பட்டன் கத்திகட்டிவைத்த பெரும்பழத்தைப் பார்த்துச் சந்தோஷமடைந்து அதைத் தின்ன ஆரம்பித்தது. தின்றுகொண்டிருக்கையில், மறைவாய்க் கட்டியிருந்த கத்தி வெகு நுட்பமாய் அறுப்பது தெரியாமலே கழுத்து, தாடை, பக்கம் முதலிய விடமெல்லாம் நன்றாய் அறுத்துவிட்டது.

அந்தநோய் உடம்பில் உறுத்தவே, நரி திடுக்கிட்டு நிதானித்துப்பார்த்து: ஆ! இது அந்தக் கேடுகெட்ட *கர்மகனுடைய காரியந்தான் என்று பெருங்கூச்சலாய்க் கதறி அவன் வீட்டுக்குப் போகத்துணியாமல் காட்டுக்கோடி, வெகுதூரத்துக்கு அப்பால், உதிரம் உடம்பினின்றும் வெகுவாய் வடிந்துபோகவே உடம்பு ஓய்ந்துபோய் அப்புறம் நடக்கச் சக்தியற்று, ஒரு பெரியபாறையில் உயிரை விட்டுவிடத் தீர்மானித்துக் காலைப்பரப்பிக்கொண்டு வீழ்ந்தது. ஆயினும் அது இறந்துபோகவில்லை. மூன்றுநாள்வரையில் உடம்பை அணுவளவும் அசைக்கக்கூடாத நோவும், அளவற்ற ரத்தம் ஆறாய்ப்பெருகிப்போனதனால் வரவர அதிக ஆயாசமும் உண்டாயிருந்தது.

நாலாநாள் சரீரத்திற்கொஞ்சம் சக்தியுண்டாகவே, நரி அந்தப் பாறையைவிட்டு எழுந்திருக்கப் பார்த்தது. அந்த மூன்றுநாளும் அதின் உடம்பு ரத்தமெல்லாம் பாறைமேல் பெருகவே, அந்தப் பாறையோடு உடம்பு காயமெல்லாம் உறுதியாய் ஒட்டிப் பொருக்குதட்டிப்போயிருந்தது. அதனால் நரி ஒன்றுந்தோன்றாமல் திகிலடைந்து தன் உடலைப் பாறையினின்றும் பெயர்க்கப் பலவிதமாய்ப் பிரயத்தினப்பட்டது. எவ்வளவு முயன்றும் உடலைப் பாறையினின்றும் பெயர்க்கக்கூடவில்லை. அதுகண்டு அந்த நரி: ஐயோ! ஐயோ! நோவு நீங்கிவிடுமென்று நினைத்துச் சந்தோஷமாயிருந்ததெல்லாம்போகக் கடைசியில் இப்படி உயிர் மாய்க்கும்படியா நேர்ந்தது! ஐயோ! இது நான் செய்த சூதுக்குச் சிக்ஷையோ! என்று பலவிதமாய்ப் புலம்பத்தொடங்கிற்று. இப்படியிருக்கையில், 'அகதிக்கு ஆகாயமேதுணை' என்கிறபடி, தெய்வ கடாக்ஷத்தால் ஒரு மழைபெய்தது. பெய்யவே மழைநீர் அதின் உடம்பிலிருந்த புண்களினூறி உடலை எளிதில் பெயர்க்கும்படி செய்தது.

* கர்மகன்—அம்பட்டன்.

அந்தப் பானையினின்றும் எழுந்திருக்க வழியுண்டானவுடனே, இனி எப்படி ஜீவனம்பண்ணுகிறதென்று நரிக்குப் பெரிய சிந்தையுண்டாயிற்று. திரும்பவும் அந்த அம்பட்டன் வீட்டுக்குப்போக அதற்கு மனந்துணியவில்லை. கொஞ்சநேரத்துக்குப் பிறகு அதன் மனதில் ஒரு யோசனை தோன்றிற்று. அந்த யோசனைப்படியே பக்கத்திலிருந்த சேற்றை ஒரு பெரிய சட்டியில் வாரிப்போட்டு, இலைகளால் அதின் வாயைப் பத்திரமாய்க்கட்டித் தலையில் வைத்துக்கொண்டு அதை விற்கப் பக்கத்தூருக்குப்போயிற்று.

அவ்வூரில் ஒரு வீட்டுவாயிலில் பெண்பிள்ளை ஒருத்தி உட்கார்ந்திருக்கக்கண்டு, நரி அவளண்டைபோய், அம்மா! வெண்ணெய் வாங்கிக்கொள்கிறீர்களா? வெகு நேர்த்தியான வெண்ணெய்; உங்களுக்குத் தேவையிருக்குமாவென்றது. அதைக்கேட்டு அவள், கொண்டுவா பார்ப்போம்; நல்ல வெண்ணெய்தானா? எதோ காட்டு என்றாள். அதற்கு நரி: இது மிகவும் உயர்ந்த வெண்ணெய்; இந்தப் பாத்திரத்தை இப்போது திறக்கக்கூடாது; திறந்துவைத்தால் கெட்டுப்போம்; அதை நீ உபயோகப்படுத்தப் போகிற வேளையிலேதான் திறந்துகொள்ளவேண்டும்; வேண்டுமானால் வாங்கிக்கொள், வேண்டாமற்போனால் நான் இன்னும் எங்கேயாவது விற்றுக்கொள்கிறேன். வீணாய்த் தாமதஞ்செய்யாதே; என்று வெகு கம்பீரமாய்ப்பேசிற்று. அந்தப் பேச்சின் திறத்தினாலும், அந்தச் சட்டிக்குள்ளிருப்பது வெகு உயர்ந்ததாயிருக்குமென்று யாவரும் நினைக்கும்படி அவ்வளவு பக்குவமாய் அதன் வாயைக் கட்டியிருப்பதாலும், அதற்குள் இருப்பது சிறந்ததாகவே இருக்குமென்று அவள் நினைத்தாள். அவளுக்கு வெண்ணெயும் அவசியம் வேண்டியதாயிருந்தது. அதனால் அவள், வெண்ணெய் நல்லதாயிராமல் நரி நம்மை மோசஞ்செய்யக் கருதியிருக்குமாயின், அதை எப்படியாவது நமது தலையில் கட்டிவிட்டுப்போம்படி நம்மை நிர்ப்பந்தப்படுத்தாதா; இப்படி ஓடிப்போவதிலேயே நோக்கமாயிருக்குமா என்று தனக்குள்ளே உறுதிகொண்டு, நல்லது, சட்டியை வை; இதோ ரூபாய், எடுத்துக்கொள்; வெண்ணெய் நல்லதென்பதற்குச் சமுசயமில்லையே என்றாள். அதற்கு நரி: நீ ஏன் திரும்பித் திரும்பிக் கேட்கிறாய்; உனக்குச் சந்தேகமிருந்தால் கொடுத்துவிடு; நான் இன்னும் எங்கேயாவது விற்றுக்கொள்கிறேன்; ஆனாலொன்று, இதை ஒரு குளிர்ந்தவிடத்திலே வைத்து உனக்கு அவசியமானபோதுதான் திறக்கவேண்டும்; மற்றப்படி திறந்தால் கெட்டுப்போம் என்று அவளுக்குத் தைரியமுண்டாகும்படி சொல்லி ரூபாயை வாங்கிக்கொண்டு ஓடிப்போய்விட்டது. கொஞ்சநேரங்கழித்து அந்தப் பெண் அதைத் திறந்துபார்த்து, நரி தன்னை மோசஞ்செய்த

தற்காக அதிக கோபமடைந்தாள். அவள் கோபம் யாரை என்ன செய்யும்! அந்நேரத்துக்குள் நரி வெகுதூரம் ஓடிப்போய்விட்டதே.

இப்படி மோசவெண்ணெய் விற்றுச் சம்பாதித்த பொருள் எத்தனை நாளைக்குத் தாங்கும். சிலநாளையில் அந்தப்பொருள் செலவழிந்துபோகவே, நரி மறுபடியும் முன்போலவே விசாரப்படத் தலைப்பட்டது. ஆயினும் அதின் அதிர்ஷ்டவசத்தால் ஒரு எருது பாதையோரத்தில் செத்துக்கிடந்தது. அதைக் கண்டு நரி சந்தோஷமடைந்து, அந்தப் பிணத்தைக் கொஞ்சங்கொஞ்சமாய்த் தின்றுகொண்டே வெளியிலிருப்பவர் கண்ணுக்குத் தெரியாமல் அதின் வயிற்றுக்குள்ளே போய்விட்டது. அது நல்ல கோடைகாலமாகையால், அந்த எருத்துத்தோல் வெயிலால் நன்றாயுலர்ந்து சுருங்கிக் கடிக்கக்கூடாமற்போகவே, உள்ளேபோன நரி திரும்பி வெளியேவர வழியில்லாமல், அதனுள்ளே அல்லாடித் தவிக்கும்படியாயிற்று.

இப்படியிருக்கையில், அவ்வூர்ப் பறையர்கள் அந்த எருதை இழுத்துக்கொண்டுபோக வந்தார்கள். அது தெரிந்து நரி: நம்மைக் கண்டால் இவர்கள் கொன்றுவிடுவார்களே; காணாவிட்டால் உயிரோடு நம்மையும் புதைத்துப்போடுவார்களே என்று பயந்து அதற்கொரு உபாயஞ்செய்தது. அந்த ஜனங்கள் கிட்டவந்தவுடனே, நரி: ஓ மனிதர்களே! நீங்கள் என்னைத் தீண்டப்போகிறீர்களா? நான் ஒரு தவசியென்று உங்களுக்குத் தெரியாதோ? என்று கூவிற்று. அவர்கள் அந்தக் கூச்சலைக்கேட்டு மிகவும் பயந்து, இதென்ன! செத்த எருது சம்பாஷணைசெய்கிறதே! ஏதோ ஒரு தேவதை இதில் உட்புகுந்திருக்கவேண்டும் என்று நடுங்கிக்கொண்டு, சுவாமிகளே! நீங்கள் யார்? தங்களுக்கு என்னதேவை என்று கேட்டார்கள். அதைக்கேட்டு நரி: நான் ஒரு பரிசுத்த ஞான தவசி, உங்களூருக்கு நானே எஜமானன்; நீங்கள் ஒருபோதும் எனக்குப் பூசை புரஸ்காரம்முதலிய உபசாரமொன்றுஞ் செய்வதில்லை; ஆதலால் நான் உங்களிடத்தில் மிகவும் கோபங்கொண்டிருக்கிறேன் என்று கூச்சலிட்டது. அதற்கு அவர்கள்: ஓ எங்கள்பெருமானே! தங்கள் திருவுள்ளத்துக்கு உவப்பான பொருள் என்னவோ அதைத் தெரிவித்தால் உடனே கொண்டுவந்து நிவேதனஞ்செய்யக் காத்திருக்கிறோம் என்று வேண்ட, நரி சந்தோஷமடைந்து: நல்லது, அளவற்ற பூக்களும், சோறும், ஒரு கொழுத்த கோழியும் கொண்டுவந்துவைத்து எனக்கு அபிஷேகஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்தால் உங்கள் பிழைகளைப் பொறுப்பேன் என்று சொல்லவே, அவர்களெல்லாம் அப்படியே கொண்டுவந்துவைத்து எருத்துத்தோல்மேல் அபிஷேகஞ்செய்தார்கள். அந்தத் தண்ணீர் ஊறித் தோல் மெதுப்பட்டவுடனே நரி அவ்வுடலைப்

பிளந்துகொண்டு வெளியே வந்து வாயில் கோழியைக் கவ்விக்கொண்டு, யாவரும் இதென்னவென்று பிரமித்துநிற்க, ஒரு குதியாய்க் காட்டுக்கு ஓடிப்போய்விட்டது. அதைப் பிடிக்கப் பலபேர் பின்தொடர்ந்து ஓடினூர்கள். ஒருவர்க்கும் சாத்தியப்படாமற்போயிற்று. ஒவ்வொருவரும் கைகால் முறிந்து திரும்பி வந்து சேர்ந்தார்கள்.

இவ்வாறு அவர்களை மோசஞ்செய்துவிட்டு அந்த நரி ஒரு பெருங்காட்டிற்சென்றது. அங்கே ஒரு செடியின்கீழ்த் தனியே தங்கியிருந்த ஆட்டுக்குட்டியொன்று இந்த நரியைப்பார்த்து: ஓ! ஓ! இது நம்மைத் தின்றுவிடுமே! இதை எப்படியாவது வெருட்டித் தூரத்திவிடவேண்டும் என்று நிச்சயங்கொண்டு: இதோ நரி, இதோ நரி, ஓடிவாருங்கள் என்று உரக்கக்கூவிப் பல ஆடுகளோடிவருவதுபோலத் தானொன்றே இங்குமங்குமாய் ஓடிக் கிளைகளைக் குலுக்கி இலைகளை அசைத்துச் சலசலவென்று சத்தமுண்டாக்கிற்று. அதைக் கேட்டு நரி பயந்து ஓடிப்போவதுகண்டு, ஆட்டுக்குட்டி மறுபடியும், சீக்கிரம் ஓடிவாருங்கள், நரி ஓடிப்போகிறது! நரி ஓடிப்போகிறது! சீக்கிரம் சீக்கிரம் என்று பலதரம் கூச்சலிட்டது. அதைக்கேட்கவே அக்காட்டிலிருந்த மற்ற நரிகள்கூடத் திகிலடைந்து ஓடிப்போய்விட்டன. இப்படி பலபேரை மோசஞ்செய்துவந்த நரி ஒரு அற்பமான ஆட்டுக்குட்டியால் வெருட்டுண்டு பயந்தோடிற்று.

"முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉங்
கற்றன மென்று களியற்க—சிற்றுளியால்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தினுல்."

இப்படித் திருட்டுப்பிழைப்புபிழைத்து எத்தனைநாள் ஜீவனஞ்செய்யமாளும். ஆட்டுக்குட்டியினின்றுந் தோல்வியடைந்தபிறகு அந்த நரி பிழைக்க வழியொன்றும் அகப்படாமல் திரும்பவும் முன் தனக்குத் தோழனுயிருந்த அம்பட்டன்ஊர் வந்துசேர்ந்து, இராவிலேதிருடி ஜீவித்துக்கொண்டிருந்தது. அந்த நரி அங்கே வருவது அவ்வூரார் ஒருவர்க்கும் சம்மதம் இல்லையாயினும், அதை ஒருவரும் ஒன்றும் செய்யமாட்டவில்லை. அதின் பழைய நேசனும் அது தனக்கு முன்செய்த வஞ்சனைக்காகப் பகைதீர்த்துக்கொள்ளத் தீர்மானித்து, அதைப் பல தடவைகளில் பிடிக்கப்பார்த்தான்; தவறிப்போயிற்று. கடைசியில் ஒருநாள் ராத்திரி வலைபோட்டுப் பிடித்துக்கொண்டு, ஆ! நன்றிகெட்ட நரியே! முன் நான் கட்டிவைத்த கத்திக்குத் தப்பிப்போனுய் அல்லவா? இனி என்னசெய்யப்போகிருய்? என்று சொல்லி, அதின் நான்குகால்களையும் வலித்துக்கட்டித் தன் மனையாளண்டைவந்து, இதோ உனக்கு எப்படிப்பட்ட

பரிசு கொண்டுவந்தேன் பார் என்று சொல்ல, அதைக்கேட்டு அவள் ஓடிவந்தாள். அவள் கையில் அந்த நரியைக் கொடுத்து இதை அவிழ்த்துவிடாமல் உள்ளே பத்திரமாய் அடைத்துவை; நான் நல்லதாய் இதை வெட்ட ஒரு கத்தி வாங்கிவருகிறேன் என்று சொல்லிப்போனான். அவளும் அப்படியே அதை உள்ளே கொண்டுபோய்ப் போட்டுவைத்தாள்.

அம்பட்டன் அப்புறம் போனவுடனே நரி அவன் மனையாளைப்பார்த்து: ஓ என் பெருமாட்டி! இன்னும் ஒரு நிமிஷத்திற்கெல்லாம் உன் கணவன் வந்து என்னைக் கொல்லப்போகிறான்; நாவறண்டுபோகின்றது, சற்று இந்தக் கட்டை அவிழ்த்துவிடுவாயானால் உனக்கு வெகு சுகிர்தமுண்டு; ஒருவாய் தண்ணீர் குடித்துவிட்டு ஓடிவருகிறேன்; தவித்த வாய்க்குத் தண்ணீரில்லாமல் இறந்துபோகிறேனே! என்று வேண்ட, அவள்: அது நான் செய்யமாட்டேன்; நீ ஓடிப்போவாய்; அவர் வந்து என்னைப் புடைப்பாரே; அந்தச் செய்தியே எனக்குத் தெரியாதென்று சும்மாவிருந்தாள். நரி மறுபடியும், அம்மா! இப்படித் தவிக்கிறேனே! உனக்குக் கொஞ்சமும் கருணையில்லையா? ஒரு நிமிஷகாலத்தில் தண்ணீர் குடித்துவிட்டு வருகிறேன்; நான் ஓடிப்போகவில்லை; சத்தியமாய்ச் சொல்லுகிறேன் என்று வெகுவிதமாய் வேண்டவே அவள்: ஐயோபாவம்! இனி இது என்னசுகம் அனுபவிக்கப்போகிறது! இன்னும் ஒரு நொடியில் உயிர் போகப்போகிறதேயென்று இரங்கி, அதின் கால்கயிற்றை அவிழ்த்துக் கழுத்தில் போட்டுப் பிடித்துக்கொண்டு வாயிலண்டையிருந்த வாய்க்காலில் தண்ணீர்காட்ட கொண்டுபோனாள். அத்தருணத்தில் நரி ஒரு குதி குதித்துத் துள்ளித் திமிறிக்கொண்டு ஓடிப்போய்விட்டது.

அதற்குப்பின்பு அந்த நரி சிலநாள்வரையில் ஓரிடத்திலும் இருப்புகொள்ளாமல், பல இடங்களிலும் ஓடித்திரிந்து கண்டதைத் தின்றுகொண்டிருந்தது. இப்படியிருக்கையில் ஒருநாள் ஓரிடத்தில் வழியேபோம்போது வழியோரத்தில் ஒரு குடிசையில் ஒரு ஏழைப்பார்ப்பான், ஏழுபெண்களை வைத்துக்கொண்டு அவர்களைக் காப்பாற்ற வழியற்று, ஐயோ! நான் இப்பெண்களை வைத்துக்கொண்டு என்னசெய்வேன்! இவர்களை ஒருவரும் கலியாணஞ்செய்துகொள்ளமாட்டோம் என்கிறார்களே; என் உயிருள்ளளவும் இவர்களை நானே போஷிக்கும்படி நேர்ந்ததே; காப்பாற்ற வழியொன்றும் இல்லையே! நாய், நரி ஏதாவது ஒன்று வந்து கேட்டாலும் கொடுத்துவிடலாம்; அதையும் காணோமே என்று சொல்லித் தானே வெறுத்துக்கொண்டிருந்தான். அதைக் கேட்டுக்கொண்டேபோன நரி மறுநாள் அங்கே வந்து, ஓ பிராமணரே! நீர் நேற்று, நாய் நரி ஏதாவது ஒன்று வந்து கேட்டாலும் என் பெண்ணைக் கொ

டுத்துவிடுவேன் என்று சொன்னீரல்லவா? இப்போது எனக்கு ஒரு பெண்ணைக் கொடுப்பீரா என்று கேட்டது.

அதைக் கேட்டவுடனே அந்த மனிதன் இதென்னவென்று திகிலடைந்தான். அவன் அந்தப்பேச்சு பேசினது உண்மையாயினும், அப்படி நேரிடுமென்று அவன் கனவிலும் நினைக்கவில்லை. அது வருத்தம்பொறுமற் பேசினபேச்சேயன்றி வேறல்ல. ஆயினும் சொன்னசொல் தவறுவது நீதி அல்லவென்று அவன் அப்படியே செய்யத் தீர்மானித்தான். அத்தருணத்தில் அப்பெண்களெல்லாம் பசியெடுத்துச் சோற்றுக்கு அழுத்தலைப்பட்டன. அப்போது அவர்களுக்குக் கொடுக்க அவனண்டை ஒன்றுமில்லை. அந்தச் சமயம்பார்த்து நரி மறுபடியும், நீர் உமது பெண்களில் ஒன்றை எனக்குக் கொடுத்துவிடுவீரானால் உமது வருத்தம் கொஞ்சம் குறைவுபடாதா? எனக்குக் கொடுக்கிறபெண்ணை நான் பாதுகாத்துக்கொள்ளுகிறேன்; அதற்காக நீர் சிந்திக்கவேண்டாம் என்றது. அதைக்கேட்டுப் பார்ப்பான் சந்தோஷமடைந்து: தன் பெரிய பெண்ணை அதற்குக் கலியாணஞ் செய்துகொடுக்க, நரியும் வெகு சந்தோஷமாய் அப்பெண்ணை அழைத்துக்கொண்டு தன் குகைக்குப் போய்விட்டது.

இந்தக் கதைகளைக் கேட்கும்போது அந்த நரி வெகு சாமர்த்தியம் உள்ளதென்று யாவர்க்கும் தோன்றவில்லையா? அது சாதாரணமான நரிகளைப்போலன்று; அப்படியிருந்தால் இத்தன்மையான காரியங்களை அது என்றைக்காவது செய்யமாட்டுமா? அவன் ஒரு சிறந்த ராஜகுமாரன்; அவன் ராஜாவாயினும் மாயைகளையெல்லாம் நன்றாய்க் கற்றுணர்ந்தவன். அதனால் விநோதத்திற்காக இப்படி மாறுவேஷம்பூண்டு திரிந்துகொண்டிருந்தான்.

அவனிருப்பிடம் வெளியிலிருந்து பார்ப்பவர்க்கு ஒரு சாதாரணமான குகையாகத் தோன்றினாலும், உள்ளே நவரத்தினங்களிழைத்த சுவர்ணமயமான ஒரு ராஜமாளிகையாய் இருந்தது. அவன் நரியல்ல, ராஜாவென்பது அவன் மனையாளுக்குக்கூடத் தெரியாது. ஏனெனில், அவன் காலைவேளைதவிர மற்றெப்பொழுதும் அந்த வேஷத்தை வாங்குவதில்லை. இப்படி அவன் ஒவ்வொரு நாளும் காலையில்மாத்திரம் நரிவேஷத்தை வாங்கி நன்றாய் ஸ்நானஞ்செய்துவிட்டு மறுபடியும் அதேவேஷந்தரித்து விநோதமாய் ஆடித்திரிந்துகொண்டு தன் சொந்தமனையாளும், இப்போது கலியாணஞ்செய்துகொண்ட பார்ப்பான்பெண்ணும் தானுமாய்ச் சுகமாக வாழ்ந்துகொண்டிருந்தான். (இன்னும் வரும்.)

மெய்யும் பொய்யும்.

வாய்மைக்கும் பொய்ம்மைக்குமுள்ள பேதம், பகலுக்கும் இரவுக்குமுள்ள பேதத்தைப்போல யாவருக்கும் தெரிந்ததாயிருந்தாலும், உண்மை இப்படிப்பட்டதென்று ஒரு வரையறை ஏற்படுத்துவது எளிதானதல்ல. ஏனெனில் பகலும் இரவும் ஒன்றாய்ச் சேரும் மாலைக்காலத்தைப் பகலென்றாவது இரவென்றாவது சொல்லக்கூடுமோ? அதுபோல, சில விஷயங்களில் இது சத்தியமென்றும் இது மித்தியையென்றும் சொல்லக் கூடாததாயிருக்கிறது. ஆகையால் உண்மையின் லக்ஷணத்தைப்பற்றிப் பலபெயர் பலவிதமாய்ச் சொல்லுகிறார்கள்.

> "வாய்மை யெனப்படுவது யாதெனின் யாதொன்றும்
> தீமை யிலாத சொலல்"

என்று நாயனார் கூறினர். இதனால் ஒருவருக்கும் தீங்குசெய்யாததைச் சொன்னால் அதுவே உண்மையென்று தோன்றுகிறது. அந்த நாயனார் மறுகுறளில்

> "பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த
> நன்மை பயக்கு மெனின்"

என்றார். ஆதலால் நடந்தகாரியத்தைச் சொல்வதும் ஒருவருக்குத் தீங்கை விளைக்குமாயின் பொய்யேயாகும். நடவாததைச் சொல்வதும் நன்மையைத் தருமாயின் உண்மையேயாகும் என்று விளங்குகின்றது. இதனால் நன்மையும் தீமையுமே வாய்மை பொய்மைகளுக்கு அறிகுறியென்று தெரியவருகிறது.

உண்மையென்பதற்கு இந்த லக்ஷணம் ஏற்படுத்துவதினால் உண்மையுடன் சிலவேளை பொய் கலந்துவிடுகிறது. உண்மை எப்போதும் உண்மையாகத்தான் இருக்கும்; பொய் ஒருபோதும் உண்மையாகமாட்டாது. சாதாரணமாய் ஒரு தப்பிதம்செய்யின் அதினால் யாதொரு கெடுதியும் உண்டாகாமல்போகுமிடத்து, அதை உலகத்தார் குற்றமாகக் கொள்ளுகிறதில்லை. நீராவியந்திரவோட்டி ஒருவன் இருப்புப்பாதையைவிட்டு வண்டியைப் பக்கத்தில் செலுத்திவிடுகிறான்; அதினால் ஒரு கெடுதியும் சம்பவியாமற் போனாலும், அவன் செய்தது குற்றமல்லவா? அப்படியே ஒருவன் மற்றொருவனை விளையாட்டுக்காக மோசம்பண்ணினால் அதை மோசமல்லவென்று சொல்லக்கூடாது. சாதாரணமாய் ஜனங்கள் பொய், மோசம், பாசாங்கு முதலானவைகளை எதற்காக வெறுக்கிறார்கள்? அவைகளிலுள்ள மோசத்துக்காகவும் பாசாங்குக்காகவும் வெறுக்கிறதில்லை; அவைகளால் தங்களுக்கு உண்டாகிற துன்பத்திற்காகவே வெறுக்கிறார்கள். அவைகளால் தங்களுக்குத் துன்பமுண்டாகாமல்போனால் அவைகளெல்லாம் நல்வினைகளென்றே நினைக்கிறார்கள். நன்றாய் ஆலோசிக்குமிடத்தில் இப்படி எண்ணுவது பிசகானது. அவைகளினின்றும் கெடுதி சம்பவித்தாலும் சம்பவியாதபோனாலும் அவைகளின் தன்மை வேறுபடாது. சரித்திரக்காரன் ஒருவன் தன் தேசத்தாரை மேன்மைபடுத்துவதற்காகக் கற்பனைகளைக் கலந்து எழுதுகிறான். ஒரு சாஸ்திரி தன் கக்ஷியை ஸ்தாபிப்பதற்கு ஒரு பொய்யைப் பேசுகிறான். ஒருவன் தன்னுடைய சிநேகிதனைக்

காப்பாற்றப் பொய்ச்சாக்ஷிசொல்லுகிருன். ஒவ்வொருவனும் தினமும் தன்னுடைய மனச்சாக்ஷியுடன் அசிரத்தையாய்ப் பொய்சொல்லுகிருன். இப்படிப்பட்டவர்கள் சரியானவர்களல்ல; இவைகளெல்லாம் பொய்யேதவிர உண்மையல்ல. இவற்றை ஒருவன் நீக்கிவிடுவோனுகில், அவனை ஒரு பாலை வனத்தில் கிணறுவெட்டினவனைப்போல எண்ணிக்கொண்டு நாம் அவனுக்கு வந்தனஞ்செய்யவேண்டியது.

ஆகையால் பொய்பேசும் வழக்கத்தை நாம் முழுதும் விட்டுவிடவேண்டியது. பெரும்பொய்சொன்னல் அவனை அதிகமாய் தண்டிக்கிறதென்றும், சிறிய பொய்பேசினல் அவனைச் சுவல்பமாய் தண்டிக்கிறதென்றும் சிலர் எண்ணுவார்கள். இது அவர்கள் சொல்லுகிற பொய்யினல் உண்டாகும் முடிவைக்கொண்டு யோசனைசெய்யவேண்டியதாயிருக்கிறதேயொழிய வேறில்லை. அப்படி முடிவைப்பற்றி யோசனைசெய்வது பெரும்பாலும் அசாத்தியமானகாரியம். மேலும் அசட்டையாய்ச் சிறிய பொய்சொல்லுகிறவனுக்கு அதிக தண்டனை விதிக்கவேண்டியது. ஏனென்றல் பெரும்பொய் சொல்லுகிறவன் அது பொய்யென்று அறிந்திருக்கிருன். சிறியபொய் சொல்லுகிறவனே அலக்ஷியத்தினலே அதை அறிகிறதில்லை. இப்படித் தெரியாமலாவது அலக்ஷியத்தாலாவது பொய் சொல்லும் வழக்கமிருந்தால் அது வரவரப் பெரிய பொய்கள் சொல்லும்படியான வழக்கத்தை உண்டாக்கிக் கடைசியில் தீமையை விளைவிக்கும். இவ்வழக்கத்தை முளையிலேயே வேரறுத்துவிட்டால், அறிந்து பொய்சொல்லுகிற வழக்கமும் தானுய் விடுபட்டுப்போகும். உண்மைபேசக் கற்றுக்கொள்வது நன்ருய்க் கையெழுத்து எழுதக் கற்றுக்கொள்வது போலாகும். கையெழுத்து படியும்படி எழுதுபவன் ஒருபோதும் அஜாக்கிரதையாய்க் கேடுகெட்ட எழுத்து எழுதக்கூடாது; விருதாவாய் ஒன்று எழுதினல் அதையும் ஜாக்கிரதையாய் திருத்தி எழுதவேண்டியது. அப்படி எழுதினல் அவனுக்குச் சீக்கிரத்தில் கையெழுத்து படியும். அதுபோல் ஒருவன் சத்தியவானுக விரும்பினல், அவன் ஒருபோதும் அலக்ஷியமாய், "இப்பொழுது பொய்பேசினலென்ன; ஒருவரும் கேட்கப்போகிறதில்லையே" என்று பொய்சொல்லக்கூடாது. இப்படி வழக்கப்படுத்தினலல்லாமல், அவன் சத்தியவானுகமாட்டான். ஒரு கண்ணுடியைத் துடைக்கும்போது இது சிறிய அழுக்கு, இது இருக்கட்டும்; அது பெரிய அழுக்கு, அதை எடுத்துவிடவேண்டுமென்று நாம் எண்ணுமல், எல்லா அழுக்கையும் ஒருசேரத் துடைத்துவிடுகிருேம். அதுபோல் நம்முடைய மனதிலிருந்து சிறிது பெரிதென்று பாராமல் எவ்விதமான பொய்களையும் நீக்கிவிடவேண்டியது. சிலபேர் ஒரு பொய்சொல்வதற்குப் பயந்து தங்களுடைய செல்வத்தையெல்லாம் இழந்துவிட்டார்களென்று நாம் கேள்விப்பட்டிருக்கிருேம். அப்படிப்பட்ட அருமையான கொள்கையை நாமும் கைப்பிடிக்கவேண்டும். அதற்குத் தினந்தோறும் ஒரு பொய்கூடப் பேசாமல் நிஜமானதையே பேச நாம் முயற்சிசெய்யவேண்டும். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்கிறபடி நாம் பிரயாசை எடுத்துக்கொண்டால் நம்முடைய கோரிக்கை நிறைவேருமல் போகாது.

சிறுவர்க்கானகதை.

சிங்கமும் சுந்தரமும் (தொடர்ச்சி).

மிகச் செல்வவானுன ஒரு வர்த்தகன் மூன்றுபெண்களோடு வெகுசந்தோஷமாய் ஒரு பட்டணத்தில் சிலகாலம் வாழ்ந்துகொண்டிருந்து, பிறகு ஏதோ ஒருகாரணத்தால் செல்வமெல்லாம் போய்த் தரித்திரனுகி ஒரு சிறியகுப்பத்திற்சென்று உழுது பயிர்செய்து அற்பஜீவனம் செய்துகொண்டிருந்தானென்றும், வீண்பெருமையும் பேராசையுங்கொண்ட பெரியபெண்களிருவரும் அதனுல் அதிக துக்கமடைந்து, தன் சாமர்த்தியத்தாலும் விவேகத்தாலும் மனஞ்சோராமலே சந்தோஷமாயிருந்த தமது தங்கையைப்பார்த்துப் பொருமைகொண்டு ஒன்றுந்தோன்ருமல் தவித்துக் கொண்டிருந்தார்களென்றும் சென்றசஞ்சிகையிற்சொன்னேமல்லவா.

அந்த வர்த்தகன் அவ்வாறு உழுது பயிரிட்டுச் சிலகாலம் ஜீவனம்பண்ணிவருகையில், போய்விட்டதென்று அவன் நினைத்து நிராசைசெய்திருந்த பெரிய சாமான் கப்பல்களிலொன்று கரைவந்து சேர்ந்ததாக ஒரு சமாசாரம் வந்தது. அதைக் கேட்கவே அவனுடைய பெரிய பெண்கள் இருவரும் உடனே அந்தக் குப்பத்தை விட்டுவிட்டுப் பட்டணம்போய்ச் சேரலாமென்று மிகுந்த சந்தோஷமடைந்து, தகப்பன் கப்பலண்டைக்குப் போவது தெரிந்து, தங்களுக்குச் சிறந்த பட்டாடைகளும், இன்னும் பல விலையுயர்ந்த பொருள்களும் வாங்கிவரச்சொன்னுர்கள். கடைப்பெண்ணுன சுந்தரமோ, அந்தக் கப்பலில் வந்திருக்கிற சரக்குகளையெல்லாம் விற்ருலும் தன் தமக்கைமார் விரும்பிய பொருள்களை வாங்குவதற்கே போதாதேயென்று, தனக்கொன்றும் வேண்டவேயில்லை. ஆயினும் அந்த வர்த்தகன் கப்பலண்டைக்குப் போகப் புறப்படும்போது தன் சிறிய மகளண்டைவந்து, குழந்தாய்! நீ ஏன் ஒன்றும் கேளாமல் சும்மாவிருக்கிருய்? உனக்கு என்ன வாங்கி வருகிறது? என்று கேட்க, அவள் என் அருமைத்தந்தையே! நீரே என்னிடத்தில் இவ்வளவு அன்பாய்க் கேட்பதனுல் ஒரு ரோஜாபுஷ்பம் வாங்கிவரவேண்டுகிறேன் என்ருள். உண்மையாய் அவளுக்கு ஒன்றின்மேலும் விருப்பமில்லை. ஒன்றுங்கேளாமலிருந்தால் தகப்பனுடைய பிரீதி பெறுவதற்காக இவள் இம்மாதிரிசெய்கிருளென்று, சகோதரிகள் தன்மேல் பொருமைகொள்வார்களென்றே அவள் அதை வாங்கிவரச்சொன்னது.

பின்பு அந்த வர்த்தகன் அவர்களிடத்தில் செலவுபெற்றுக்கொண்டு கப்பலண்டைக்குச் சென்ருன். அங்கே சிலர் வந்து அந்தக் கப்பற்சாமான்களின்மேல் தாவாசெய்ததனுல் அவன் மிகவும் வருத்தப்பட்டு, போனபடியே வீட்டுக்கு வரத் திரும்பினுன். பாதிவழியில் வந்துகொண்டிருக்கையில் வழிதப்பிப்போனதுமன்றி, நன்ருய்க் காற்றுமழை அடித்து அவன் இரண்டுமூன்று

தாம் குதிரைமேலிருந்து கீழே விழுந்து உடம்புமுழுதும் சேருகிக் குளிரும் இளைப்பும் அதிகரிக்கத் தலைப்பட்டன; அச்சமயத்தில் பொழுதுபோய்விட்டது; பசியும் குளிரும் அவனை நன்றாய் வருத்தத் தலைப்பட்டன. நாலாமூலையிலும் கோநாய் குடத்திமுதலியவைவை பயங்கரமாய் ஊளையிடத்தொடங்கின. இப்படிப்பட்ட ஆபத்து வேளையில் அவன் திசைதெரியாமல் தவித்து அல்லாடுகையில், ஒரு பெரிய சாலையும் அந்தச் சாலைக்கோடியில் வெகுதூரத்தில் ஒரு விளக்குவெளிச்சமும் தோன்றின. அதைக் கண்டு அவன் வெகு சந்தோஷமடைந்து, ராத்திரி அங்கேபோய்த் தங்கியிருக்கலாமென்று அவ்விடத்திற்குச் சென்றான். அது ஜகஜ்ஜோதியாய்க் கோடி சூரியன் உதித்ததுபோல் அநேகம் விளக்குகள் ஏற்றி விசேஷமாய் விளங்காநின்ற ஒரு அரண்மனையாயிருந்தது. அவ்வளவு மேன்மையாய்ப் பிரகாசிக்கின்ற அவ்விடத்தில் ஒரு பிராணியையும் காணாமையால், அவன் அஞ்சி அஞ்சி அதன் கோபுரவாயிலைக்கடந்து உள்ளே சென்றான். அவ்விடமிருந்த அழகைக் கண்டு ஆனந்தமும், தன்னை யாராவது கண்டு திருடனென்று தண்டிப்பார்களோவென்று திகிலுமடைந்து ஒன்றுந்தோன்றாமல் தாமரையிலையில் விழுந்த தண்ணீர்போல் தத்தளித்துநின்றான். அந்த அரண்மனையில் சுவர்முழுதும் நிலைக்கண்ணாடிகள் புதைத்து, நடுவே பலவிதச் சிறந்த கட்டில்களும், மேஜைகளும், நாற்காலிகளும், ஸோபாக்களும், இன்னும் அநேக விநோதவஸ்துக்களும் அமைத்திருக்கவே, இவைகளெல்லாம் நாற்புறமும் கண்ணாடிகளில் பிரதிபலிக்கக்கண்டு, இவைகள் உண்மையான பொருளென்றும், இவை பிரதிபலனத்தால் தோன்றியவையென்றும் தெரியாமல் மதிமயங்கி, அவன் கொஞ்சநேரம் அங்கேயே திகைத்து நின்றிருந்து மறுபடியும் வெளியேவந்து குதிரையைக் கொட்டாரத்திற்குக் கொண்டுபோனான். அங்கே கொள்ளு கடலை முதலியவைகள் சித்தமாய்ச் சுண்டிவைத்திருக்கவே அதைக்கண்டு இதென்னவென்று அதிசயமடைந்து அதை வேண்டுமளவு குதிரைக்குக் காட்டிக் கட்டிவிட்டு, மறுபடியும் அந்தச் சபாமண்டபத்திற்குவந்தான். அப்போதும் ஒருவரும் வந்திருக்கவில்லை. அவன் இதென்ன அதிசயமென்று ஒவ்வோரிடமாய்ப்பார்த்துக்கொண்டு போகையில் ஓரிடத்தில் கணகணவென்று அடுப்புத்தீ ஜொலித்துக்கொண்டிருக்க, பஞ்சபக்ஷிய பரமான்னத்துடன் சாப்பாடு சித்தமாய்ச் சமைத்து வைத்திருந்தது. அவன் குளிரில் அடிபட்டு உடம்பெல்லாம் நடுக்கமுற்று இருந்ததனால், அடுப்பண்டை உட்கார்ந்து சுகமாய்க் குளிர்காய்ந்துகொண்டு பனிரண்டு நாழிகைவரையில் யாராவது வருவார்களோவென்று காத்திருந்தான். அவ்வளவு நேரத்திற்கும் ஒருவரும் வாராமையால், பசிபொறுக்கமாட்டாமல் அங்கே ஆக்கிவைத்திருந்ததை வயிறாறப் புசித்துவிட்டு, மறுபடியும் சபாமண

டபம் வந்துசேர்ந்தான். அப்போது பதினைந்து நாழிகையாகியும் ஒருவரும் தென்படவில்லை; அவன் பட்ட வருத்தத்தால் உடம்பு மிகவும் ஓய்ந்துபோகவே, அங்கிருந்த சிறந்த மெத்தைமேல் போய்ப் படுத்து உடனே அயர்ந்து தூங்கிப்போனான்.

காலையில் பொழுதுவிடிந்து பத்துநாழிகைவரையில் அவனுக்கு நித்திரைதெளியவில்லை. அதன்பின்பு எழுந்துபார்க்கையில், ராத்திரி வரும்போது பனிமூடிப் பயங்கரமாய்க் கிடந்தவிடமெல்லாம் வெகு அழகான சிங்காரத்தோட்டமாய் இருந்தன. அந்தச் சபாமண்டபத்தில் தரித்துக்கொள்வதற்கு வேண்டிய உயர்ந்த உடைகளும், காலைப்போஜனத்திற்கு வேண்டிய உண்வுகளும் சித்தமாயிருந்தன. அந்த வர்த்தகன் அவைகளையெல்லாம் காணவே, தனக்கு நேர்ந்த ஆபத்தைச் சிந்தித்துத் தன்னிடத்தில் தயவுசெய்து யாரோ ஒரு தேவதைதான் அவ்வாறு செய்திருப்பதாக நினைத்து, மனமகிழ்ந்தான். பிறகு, ஸ்நாநசந்திமுதலிய காலைக்கடன்களைக் கழித்து, போஜனத்திற்குப்போய் உட்காருகையில், அந்த தேவதையைப் பலவிதமாய்த் தோத்திரஞ்செய்து திருப்தியாய்ப் புசித்துவிட்டுத் தன்வீட்டுக்குப்போகப் புறப்பட்டான். அந்த மாளிகைவாயிலண்டை சிங்காரத்தோட்டத்திலே ரோஜாப் பூக்கள் வெகுநேர்த்தியாய்ப் பூத்திருக்கவே, அதைப் பார்த்தவுடன் அவனுக்குத் தன் சிறியமகள் கேட்டது நினைவுவந்தது. அதனால் அந்தப் பூக்களில் ஒரு கொத்து பறித்துக் கையில் எடுத்துக்கொண்டு அவன் போகப் பயணப்பட்டான்.

(இன்னும் வரும்).

வைசூரி சாத்தியமான வியாதியா?

வைத்தியசிரேஷ்டராகிய

டாக்டர் ஜியார்ஜ் ஸ்மித்து துரையவர்கள்

சென்னை விநோதக்காட்சிசாலையில்

வைசூரியைக்குறித்துச் செய்த

உபந்யாஸம்.

வைசூரிவியாதி வராமல் பரிஷ்காரமாய்த் தடுத்தல்.

இங்கிலீஷ் சேனைகளின் அனுபவத்தைப் பார்க்கும்போது பலாத்காரமாய் அம்மைகுத்துவது மிகவும் அவசியமென்று வெகு உறுதியாய்த் தெரியவருகின்றது. இங்கிலீஷ்காரருடைய தரைச்சேனையிலும் கப்பற்சேனையிலும் வைசூரியின் கொடுமை கிடைக்கவே கிடையாது.

1817–ஹுமுதல் 1836–ஹுவரையில் 20 வருஷகாலத்தில் குதிரைப்பட்டாளமும் காவலாட்களுமடங்கிய சுமார் 44,611 பேர்களில், பலவித கார

ணங்களாலும் இறந்த 627 பேர்களுள், வைசூரியால் மரித்தவர்கள் 3 பேர்களே. அதேகாலத்தில் ஜிப்ரால்டரிலிருந்த பட்டாளம் 44,611 பேர்களில் பலவித காரணங்களாலும் இறந்த 1291 பேர்களுள், அம்மையினால் இறந்தது ஒருவனே; அதேகாலத்தில் மேலிந்தியாவில் 86,661 பேர்களடங்கிய பட்டாளத்தில் 6803 மரணமும், 40,934 பேர் அடங்கிய வேறு தண்டுகளில் 1645 மரணமும் நேர்ந்தபோதிலும், வைசூரியால் ஒரு மரணங்கூட நேரிட்டதில்லை. அக்காலத்தில் அவ்விடமெங்கும் வைசூரி மற்ற ஜனங்களை மாத்திரம் மும்மரமாய்க் கொள்ளையிட்டுக்கொண்டிருந்தது. பர்முதா, நோவாஸ்கோஷியா, நியூப்ரன்ஸ்விக், கேப் அவ் குட்ஹோப், முரிஷஸ் இத்தேசங்களிலும் அந்தக்காலத்தில் இங்கிலீஷ்சேனைகளில் அம்மையினால் ஒரு மரணங்கூட நேரிடவில்லை. மேல் ஆபிரிகாவிலும் அப்படியே; அக்காலத்தில் அத்தேசத்து மற்ற ஜனங்களோ வைசூரியால் கும்பல்கும்பலாய் மாண்டுகொண்டிருந்தன. இவ்வுலகத்தில் பலவிடங்களிலுமிருக்கிற கப்பற்சேனைகளின் 1874–வருஷத்து அறிக்கையால், அவர்களுள் 9 பேருக்கு அம்மை கண்டதாகவும், வைத்தியசாலையில் சிகிச்சைசெய்ததில் ஒன்றுமாத்திரம் அவைகளுள் அபாயமாய் முடிந்ததாகவும் தெரியவந்தது. ஆதலால் அம்மை குத்துவது பலமாயிருக்குமாயின் அது அம்மையினால் மரணத்தை மறுக்குமென்பது மாத்திரமேயல்லாமல் அம்மையை அண்டவொட்டாமல் மறுக்கவும்மாட்டும். அம்மைகுத்துவது பலமாயிருக்கவேண்டுமென்பதே எனது கொள்கை.

இப்போது நமது தேசத்தைச் சற்றுத் திரும்பிப்பார்ப்போம். இங்கே எந்தெந்த வகுப்பினர் அம்மையினின்றும் செம்மையாய்க் காக்கப்பட்டிருக்கின்றனர்? சிபாய்களும் ஸோல்ஜர்களுமாகிய பல போர்வீரர்களும், சிறைச்சாலையில் அடைபட்டவர்களும், பரதேசி அன்னசாலைகளிலிருக்கும் ஏழைஜனங்களும், நன்றாய்க் கற்றறிந்த ஐரோப்பியர்களும், சட்டைக்காரர்களென்கிற ஈஸ்டிண்டியர்களுமே அப்படிக் காப்பாற்றப்பட்டவர்கள். இப்போது தொடங்கியிருக்கிற வியாதியால் இவர்களுக்குள் ஏதாவது கெடுதியுண்டோ? இந்த வியாதி இவர்களை வெகுவாய்த் தீண்டவில்லை; அப்படியிருக்க, அதனால் அபாயமென்கிற பேச்சேது? எங்கேயாவது இரண்டொன்று இதற்கு விரோதமாய் நடந்திருக்குமாகில், அதற்குப் பல காரணமுண்டு. முதலாவது: சில தேகவாசிக்கு இரண்டு மூன்றுதடவையும் அம்மை போடுவதுண்டு. இரண்டாவது: அம்மை குத்தினதெல்லாம் திருத்தமாயும் உறுதியாயும் இராது. மூன்றாவது: அவர்களுக்கு அம்மைகுத்தின பால் சுத்தமானதாயிருந்திராது. கடைசியாய், வாலிபத்தில் அம்மைகுத்தினது சில தேஹகக்கூறுகளுக்கு நெடுநாள் தாங்கமாட்டாமல் வயதுவந்தபிறகு வலிமை குறைந்துபோகின்றது. இக்காரணங்களாலேதான் மறுபடியும் காண இடமுண்டாகின்றது. மேலும், வைசூரிவியாதி பலமாய்க்காண்கிற காலங்களில் அதின் விஷம் அதிக உக்கிரமாய், அவ்வளவு கொடுமையைத் தாங்கமாட்டாத சில தேகங்களைத் தாக்குகின்றது. ஒவ்வொருவேளைகளில் காண்கிற வியாதி எப்படிப்பட்ட தேகத்தையும் தாக்கும்படியான கொடுமையுடையதாயிருப்பதனால், இந்த வியாதி காணும்போதெல்லாம் மறுதரம் அம்மைகுத்திக் கொள்வதே நலமென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.

வியாதியும் அதின் மாற்றவிழ்தமும்.

வைசூரிப்பால் அதிக வலிமையுள்ளதாயிருக்குங்காலத்திலேதான் அதைச் சாந்தப்படுத்தத்தக்க மாட்டின் வைசூரிப்பாலும் வீரியமுள்ளதாயிருக்கின்றது. இந்த விஷயம் மிகவும் அதிசயிக்கத்தக்கதாயிருப்பதுமன்றி நமக்கு எவ்வளவு உற்சாகத்தை உண்டுபண்ணுகின்றது! வியாதியைப்போலவே அதின் மாற்றுமிருக்கின்றது. செம்மையாய்ச் சம்ரக்ஷணைசெய்துகொண்டவர்களில் வைசூரியால் மரணம் 100க்கு ½க்கு அதிகரிப்பதில்லை.

அம்மைவராமல் காக்கிற திறமை வைசூரிப்பாலின் குணத்திலும் அதின் அளவிலுமிருக்கிறதென்பது அநுபவத்தால் தெரியவருகின்றது. அம்மை குத்திக்கொள்கிற குறிகள் ஒன்றைவிட இரண்டு விசேஷமானது. மூன்று அதைவிட விசேஷமானது; நான்கு அதையும்விட விசேஷமானது என்று தெரியவருகிறது. ஒரு குறியிடுவது அம்மை வரவொட்டாமல் நம்மைக் காக்குமென்று நம்பக்கூடாது. செம்மையாய் இரண்டு குறியிடுவது நம்மை ஒருவாறு பாதுகாக்கலாம்; நன்றாய் மூன்று குறியிடுவது நமக்குச் சரியாய் சம்ரக்ஷணைசெய்யும்; நான்கு குறிகள் செய்வதோ நம்மைச் செம்மையாய்க் காப்பாற்றுமென்பதற்குச் சந்தேகமேயில்லை. ஒவ்வொரு புஜத்திலும் மூன்று அம்மைக்குறி செய்துகொள்கிற வழக்கம் மிகவும் மெச்சத்தக்கது.

சென்னபட்டணத்து மரணவீதம்.

அம்மைகுத்துவதினுடைய பலனை நம்ம ஜனங்களில் விசேஷமாய்ப் பரவச்செய்யும்பொருட்டு அம்மைகுத்துகிற தொழிலாளிகள் சிரத்தையாய் பாடுபட்டுக்கொண்டிருப்பதனால், இப்பொழுது பட்டணத்தில் இந்தத் தொடர்வியாதியினால் நேரிடும் மரணவீதம், அம்மை குத்துவதினால் ரக்ஷிக்கப்படாத ஜனங்களில் நேரிடும் மரணவீதத்தைவிட வெகுவாய் குறைந்திருக்கவேண்டியது. இந்தப் பிரசிடென்சியில் வைசூரிக்கும் இன்னும் இதரவியாதிகளுக்கும் ஏற்பட்டிருக்கும் வைத்தியசாலைகளின் அனுபோகத்தைக்கொண்டு, ஜாக்கிரதையும் சிகிச்சையுமில்லாமல் அற்பமான குடிசைகளில் வசிக்கும் எளியஜனங்களில் விஸ்தார மரணம் நேரிடுமாகையால் அதற்கு அதிக தொகைசேர்த்து, கணக்கிட்டுப் பார்த்தாலும் வியாதி பீடிதமானவர்களில் மரணவீதம் நூற்றிற்குப் பனிரண்டுக்குமேல் செல்லுகிறதில்லையென்பது என்னுடைய அபிப்பிராயம்.

சில வருடகாலங்களாய் அம்மைகுத்தும் தொழிலாளிகள் சிரத்தையோடு பயன்படும்படி அம்மைகுத்துவதின் பலனை விசேஷமாய்ப் பரவச்செய்யப் பாடுபடுவதைக்குறித்து நான் முன்னதாய்ச் சொல்லியிருக்கிறேனே. 1872–73 முதல் 74–75வரையிலுமாகிய 3 வருஷகாலத்தில் அம்மைகுத்தும் வைத்தியசாலையிலும் பட்டணத்திலும் 96,024 அம்மைகுத்துவது நடத்தப்பட்டது. இந்தக் கணக்கின்படி வருஷத்தில் சராசரி 32,000க்குக் குறையாமல் அம்மைகுத்தப்படுகின்றதென்றால் அம்மைகுத்துகிற தொழிலாளிகள் சிரத்தையாய்ப் பாடுபடுகிறார்களென்பதை அங்கீகரிப்பதற்கு ஆக்ஷேபமென்ன? இப்பொழுதிருக்கும் தொடர்வியாதியின் வேகத்தைத் தணிக்கவும் மன்னுயிர்களைக் காப்பாற்றவும் இவர்களுடைய பிரயத்தனங்கள் விசேஷமாய்ப் பயன்பட்டன. ஆயினும் இவ்வளவு பிரயத்தனங்களை

யும் லக்ஷியஞ்செய்யாமல் மேன்மேலும் பலமாய் நோய் உண்டாகிக் கொண்டிருப்பதை யோசிக்குங்கால் வைசூரிசம்பந்தமான தொடர் வியாதிகளை மாறச்செய்ய ஜனங்களிஷ்டப்படி அம்மைகுத்துவதுமாத்திர மேயல்லாமல் வேறொருகாரியமும் செய்யவேண்டுவது அவசியமென்று தோன்றுகின்றது. இந்த முடிவை டாக்டர் ஷார்ட் துரையவர்கள் தவிர வேறொருவரும் ஒத்துக்கொள்ளுகிறதில்லை.

மறுதடவை அம்மைகுத்துவது.

மறுதடவை அம்மைகுத்தவேண்டுவது அவசியமென்று மேலே குறித்தோமல்லவா? அதைப்பற்றி இன்னும் சில சங்கதி சொல்லவேண்டியிருக்கிறது. குழந்தை பிறந்த 6–வது வாரம்முதல் 12 வாரத்திற்குள் அம்மை குத்தவேண்டும். இங்கிலாந்துதேசத்துச் சட்டத்தின்படி குழந்தைபிறந்த மூன்று மாதத்திற்குள் குத்தவேண்டும். நோயுள்ள குழந்தையாயிருக்குமாயின், அம்மைகுத்துதலைத் தாளும்படியான திடம்வருமளவும், வைத்தியருடைய சர்ட்டிபிகெட்டினால் தாமதிக்கலாம்; வீண்தாமதஞ்செய்தால் குழந்தைக்கு அம்மையினால் அபாயத்திற்கு ஏதுவாகும். முதல்தடவை அம்மைகுத்துவது சரியானதாகவிருந்தால் அம்மை உக்கிரமாய் வரவொட்டாமல் காப்பாற்றும்; ஆனால் அதின் காப்பாற்றுகிற சக்தி வயதேறி யவ்வனம் வரவரக் குறைந்துபோகின்றது. இதனாலேதான் வைத்தியர்களெல்லாம் பிரவுடைப்பருவம் வரும்போது மறுபடியும் அம்மைகுத்தும்படி சொல்லுகிறார்கள். அந்தப் பருவந்தான் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சரீரம் பூர்த்தியாய்க் கட்டிவருகிற காலமாகையால் அப்போது விசேஷமாறுபாடுகளுக்கு இடமுண்டாகின்றது. இந்த மாறுதலுண்டாகுங்காலத்தில் முன் அம்மை குத்தினதினால் உண்டான சம்ரக்ஷணை சக்தியும் மாறிக் குறைவுபடுகின்றது. மறுதடவை அம்மைகுத்துவதனால் அந்தச் சக்தி மறுபடியும் நன்றாய் ஆயுளளவும் ஸ்தாபிக்கப்படுகின்றது. உக்கிரமாய் வைசூரி காணும்போதெல்லாம் அம்மைகுத்திக்கொள்ளவேண்டுமென்று அநேகர் வற்புறுத்துகிறார்கள். அதனால் கெடுதி யாதொன்றுமில்லை. மேலும் நமக்கு ஒரு தீங்குமில்லையென்று நாம் துணிவாய் நம்பியிருக்கலாம். ஆனால் அப்படி அடிக்கடி குத்திக்கொள்ளவேண்டுவது அவசியமன்று. பாலியத்தில் சரியாய்க் குத்திக்கொள்வதும் சுமார் 18 வயதில் மறுதடவை நன்றாய்த் குத்திக் கொள்வதுமே போதுமானது.

மறுதடவை அம்மைகுத்திக்கொள்வதற்குத் திருஷ்டாந்தமொன்று சொல்லுகிறேன். லண்டன்நகரத்து வைசூரி வைத்தியசாலையில் வேலைபார்த்துவருகிற போஷகர்களும் சிப்பந்திகளும், அந்த வைத்தியசாலையில் வேலையாய்ப் பிரவேசிக்குபமோது அம்மைகுத்திக்கொண்டே சேர்வது வழக்கம். அந்த வேலைக்காரர்களுக்குள் ஒருவருக்காவது 41 வருஷகாலமாய் வைசூரிவந்ததில்லை.

மேற்கூறியவைகளால் நாம் அறிந்தது.

அம்மைகுத்துவது வைசூரிவராமலிருப்பதற்கு ஒரு ரக்ஷணையாகமாட்டாதென்று சொல்வது க்ஷேத்திரகணிதத்தில் ஒரு சூத்திரத்தின் உண்மையைத் தடுப்பதுபோலாம். ஆயினும் பலாத்காரமாய் அம்மைகுத்துவதை ஏற்படுத்தினால் வைசூரி ஒருவருக்கும் காணமலேயிருக்குமென்று சொல்

வத்துணியக்கூடாது. வைசூரிக்குத் திரும்பித்திரும்பிக் காண்கிற குணமுமுண்டு. அம்மைகுத்தியபோதிலும் வைசூரிகண்டு வருந்தத்தக்க சரீரத்தன்மையும் அநேகருக்குண்டு. அடிக்கடி வைசூரிகாணத்தக்க சரீரக்கூறு உடையவர்களுமுண்டு. வைத்தியன் ஒருவன் இருந்தான். அவன் வைசூரிகண்டவர்களுக்குச் சிகிச்சைசெய்யும்போதெல்லாம் அவனுக்கு வைசூரி கண்டுகொண்டிருந்தது. இவையெல்லாம் ஒருவகைச் சரீரக்கூறுகள். ஆதலால் அம்மைகுத்துவதைப் பலாத்காரமாய் ஏற்படுத்தினாலும் அம்மை அடியோடு ஒழிந்துபோகமாட்டாது. இப்படிப்பட்ட தேஹக்கூறு உடையவர்களுக்கெல்லாம் வந்துகொண்டுதானிருக்கும். ஆயினும் அதின் தீங்குமாத்திரம் விசேஷமாய் விளையாது.

சரியாய் அம்மைகுத்துவது.

வீரியமுள்ளதும் பரிசுத்தமுமான பாலிருந்தாலல்லது அம்மைகுத்துவது நன்றாய்ப் பயன்படாது. அம்மைகுத்துகிறவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற விதிகளில் இவ்விஷயங்கள் செம்மையாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. கைக்குக்கை குத்திக்கொள்ளுகிற விஷயத்தை வெகு ஜாக்கிரதையாய் நடத்தினால் பாலெடுக்கப்பட்ட குழந்தையின் சவுக்கியமும் குத்திக்கொண்ட குழந்தையின் சவுக்கியமும் பிரத்தியக்ஷமாய்த் தெரியவரும். இப்போது இப்பட்டணத்தில் உபயோகமாகிவருகிற அம்மைப்பால் மிகவும் பரிசுத்தமானதாயும், லகுவாய் வைசூரியுண்டாக்குவதாயுமிருப்பதுமன்றி அதனாலுண்டாகிற பயன்களும் நமக்கு மிகவும் திருப்திகரமாயிருக்கின்றன.

சமாசாரம்.

இத்தேசத்துப் பஞ்சம்.—ஒன்றரைவருஷகாலமாய் இந்தப் பிரதேசங்களில் எங்கும் சிறிதும் மழைபெய்யாமலிருந்து இரண்டுமாதத்திற்கு முன்பு அங்கங்கே ஒருவாறு மழைபெய்து கொஞ்சம் ஜலஸமிர்த்தியுண்டானதால் நாடுகளில் ஜனங்கள் ஏதோ ஒரு காணக்காட்சி கண்டதுபோலப் பேரானந்தமடைந்து, எவ்வளவோ வருத்தப்பட்டு விதைவாங்கிப் பலவகைப் புஞ்செய்ப்பயிர்களும் நஞ்செய்ப்பயிர்களுஞ்செய்தார்கள். உடனே மறுத்தும் ஒருமழை பெய்யாமையால், முன்வந்திருந்த சொல்பஜலம் சீக்கிரத்தில் வறண்டுபோய், வெகுவாய்ச் சேதங்களுண்டாயின. இப்போதுதான் அங்கங்கே சிலதினங்களாகக் கண்டவருஷமாய்த் தூறிக்கொண்டிருக்கின்றது. ஆயினும் இந்த மழை ஒருவாறு தாபத்தைத் தணிக்கவல்லதேயன்றிப் பயிர்த்தொழிலுக்குப் போதுமானதன்று. அதனால் பயிரிடுங்குடிகள் ஒன்றுந்தோன்றாமல் என்னசெய்வோமென்று ஏங்குகிறார்கள். இப்படி நாட்டில் வருந்துகிற குடிகள்விஷயமாய் இங்கிலாந்து சீமையிலுள்ள தனவான்களைத் திரவியசகாயம் கேட்கும்பொருட்டு சீக்கிரத்தில் நமது கவர்னர் அவர்களுடைய மாளிகையில் ஒரு சபைகூட நிச்சயித்திருக்கிறார்கள்.

சென்ற 7, 8 மாதகாலமாய் இச்சென்னையில் ஏழைப்பேதைகள், உண்ண உணவில்லாமல் உபவாசமிருந்து, படுகிற வருத்தத்தையும், அதனால் உண்டாகும் உயிர்ச்சேதத்தையும் கேட்டால் வெகு பரிதாபமாயிருக்கும்.

இன்னும் கொஞ்சகாலமிப்படியே இருக்குமாயின் இந்தத் தீமைகள் வரவர விருத்தியாகி உயிர்களை வெகுவாய் வதைக்குமென்பதற்குச் சந்தேகமேயில்லை. இப்போது துரைத்தனத்தார் பற்பல புதிய வேலைகளைக் கற்பித்து அங்கங்கே அநேகமாய் அன்னசாலை ஏற்படுத்தி ஏழைஜனங்களைப் பலவாய் பரிபாலித்துவருகிறார்கள். ஆயினும், இந்தச் சுமைமுழுமையும் அவர்கள்மேலேயே சார்த்திவிட்டு மற்றவர்கள் நிர்ப்பரர்களாயிருப்பது போதுமானதல்லவென்றும், இத்தேசத்துக் கனவான்களும் தருமசிந்தையுடையவர்களாய்த் தங்கள்தங்களுக்கு இயன்றமட்டும் உதவுவார்களானால் மகோபகாரமாயிருக்குமென்றும் நெடுநாளாய் எண்ணமுண்டாயிருந்தது. ஆதலால் அதற்காக இப்போது ஒரு சங்கத்தார் ஏற்பட்டு, 'நகரோபகாரநிதி' என்று ஒரு நிதி ஸ்தாபித்து ஜாதிமதபேதங்களொன்றையும் பாராமல், பிழைக்க வேறு வழியில்லாத பேதைகளனைவர்க்கும், பனிரண்டுவயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு வாரம் ஒன்றுக்கு 4 அணு வீதமும், மேற்பட்டவர்களுக்கு 8 அணு வீதமுமாய்க் கொடுக்கும்படி தீர்மானித்திருக்கிறார்கள். இந்த ஏற்பாட்டைத் துரைத்தனத்தார் அங்கீகரித்ததுமன்றி லோகோபகாரமான இக்காரியத்திற்குத் தாங்களும் உபகரிப்பார்களென்று நம்பத்தக்கதாயிருக்கிறது.

மேற்படி சங்கத்தார் இந்தத் தருமகாரியத்தைக் கூடியசீக்கிரத்தில் தொடங்க ஆவல்கொண்டிருப்பதனால், அவர்கள் பொக்கிஷதாரராக ஏற்படுத்திய அர்பத்நட்டு கம்பெனியாருக்கு, உடனே கையொப்பங்கள் அனுப்பப்படுமோயின் மிக்க நலமாயிருக்கும்.

ருஷிய துருக்கியர் சண்டை.—சென்றமாதத்தில் ஆசியாவைச்சார்ந்த பாகங்களில் ருஷியர் கொஞ்சம் பின்வாங்குகிறார்களென்றும், டானியூப் நதியைத் தாண்டிவர முயலுகிறார்களென்றும் சொன்னோமல்லவா? ருஷியர் ஆசியாவில் முழுதுந் தோல்வியடைந்து தங்களுடைய குண்டு மருந்து முதலிய சாமான்கள் ஒன்றும் பகைவர்கையிற் பிடிபடவொட்டாமல் ஆற்றிலெறிந்துவிட்டு திக்குக்கொருவராய்ப் பிரிந்தோடிப்போனார்கள். அங்கே நடந்த யுத்தத்தில் மூவாயிரம்பேருக்குக் குறையாமல் போர்வீரர் மாண்டுபோனதுமன்றி அநேகம் பொருள்நஷ்டமும் அவர்களுக்கு நேரிட்டது. பின்பு அவ்விடம்விட்டு டானியூப் நதிப்பக்கத்தில் அநேகந்தடவை ஒன்றாய்ச்சேர்ந்து துருக்கியர்களை எதிர்க்க முயன்றும், அதிக சுறுசுறுப்பும் உற்சாகமுமாய்ச் சண்டைக்குச் சித்தமாகக் காத்திருக்கிற துருக்கப்படைகளை வெல்லமாளாமல் அபஜயப்பட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். துருக்கியர் தாம் ஜயமடையும்போதெல்லாம் ருஷியருக்கு வெகுசேதமுண்டாக்கிக்கொண்டிருக்கிறார்கள். ருஷியரும் சும்மாவிராமல் பிலிபபோலிசுக்கும் எட்ரியாநோபிலுக்கும் போக்குவரவு நடக்கவொட்டாமல் வழிகளைத் துண்டித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ருஷியர் பால்கன் பருவதத்திற்குக் கொஞ்சந் தெற்கே ஒதுங்கிவருவார்களானால் உடனே அவர்களை எதிர்க்கச் சித்தமாய், மத்தியதரைக்கடலிலுள்ள காப்புச்சேனையை பிலைகா குடாக்கடலுக்கு அங்கிலேயர் அனுப்பியிருக்கிறார்கள். இப்போது இருக்கிற நிலையைப்பார்த்தால் தருணம்பார்த்து அங்கிலேயரும் ஆஸ்திரியாதேசத்தாரும் இந்தச் சண்டையில் தலையிட்டுக்கொள்வார்போலே தோன்றுகிறது.

Printed at the C. K. S. Press.



LORD LYTTON.
லார்ட் லிட்டன்.